Registered as a Newspaper பக்கங்கள் 04 விலை: ரூபா 5-00

# ஈழநாதம்

THE EELANAATHAM மக்கள் நாளிதழ் Peoples Daily

நாதம் 04 திருவள்ளுவர் ஆண்டு 2024 ஐப்பசி 10 26-10-1993 செவ்வாய்க்கிழமை ஓசை 250

## காவல்துறையின் செயற்பாடுகள்; அபிப்பிராயங்கள் பெறப்படுகின்றன

யாழ். குடாநாட்டில் பரவலாக மக்கள் கருத்தை அறியும் பணியில் தமிழீழ காவல் துறையினர் ஈடுபட்டு வருகின்றனர் தமிழீழத்தில் சட்டம் ஒழுங்கை நிலை நாட்டும் நோக்குடன் மிகக்குறைந்த வளங்களைக் கொண்டு ஆரம்பிக்கப்பட்ட தமிழீழக் காவல் துறை வரும் நவம்பர் மாதத்துடன் தனது இரண்டாவது ஆண்டைப் பூர்த்தி செய்ய வுள்ளது. இவ் வேளையில் இதுவரை காலமும் சட்டம் ஒழுங்கை நிலைநாட்டுவதில் தமிழீழக் காவல் துறையினர் வகித்த பங்குபற்றிய மக்களின் அபிப்பிராயத்தைத் திரட்டிக் கொள்ளும் நோக்குடனேயே காவல் துறையினர் கிராமங்கள் தோறும் சென்று பொதுஸ்தாபனங்கள், சனசமூகநிலையங்கள், வர்த்தகர் (4ஆம் பக்கம் பார்க்க)

# கிளாலி பாதையை தடைசெய்ய மற்றுமொரு ராணுவ நடவடிக்கை

## விரைவில் நடக்கும் என்கிறார் உயர் இராணுவ அதிகாரி

வவுனியா)

கிளாலி தொடர்ந்தும் போக்குவரத்திற்கு தடைசெய்யப்பட்ட பிரதேசமாக இருந்து வருகிறது. இந்தக் கடலேரி ஊடாக மீண்டும் படகுச்சேவைகள் நடைபெறுவதாக எமது இராணுவபுலனாய்வு அறிக்கைகள் தெரிவிக்கின்றன. எனவே இந்தப் படகு பயணங்களை நிறுத்துவதற்காக மற்றுமொரு இராணுவ நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்று வவுனியா செட்டிகுளம் இராணுவ முகாமில் நேற்று முன்தினம் இடம்பெற்ற செய்தியாளர் மாநாட்டில் இராணுவ உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்

எப்பொழுது அந்த இராணுவ நடவடிக்கை மேற்கொள்ள உத்தேசம் என்று கேட்கப்பட்டபோது 'விரைவில்' என்று மட்டும் அந்த இராணுவ அதிகாரி பதிலளித்தார்.

கிளாலி கடலேரி கடல் பயணம் எமக்கு விடுக்கப்பட்டிருக்கும் ஒரு சவால். இந்தச் சவாலை நாம் முகம் கொடுத்து வெற்றி கொள்ளவே வேண்டும்என்றும் அவர் குறிப்பிட்டார்.

உள்ளூராட்சித் தேர்தல் கிட்ட நெருங்கிக் கதவைத் தட்டுகிறது இதற்கு வவுனியா நகரம் தயாராகஇருக்க வேண்டும்.

வவுனியாவில் நகரசபைத் தேர்தலை அமைதியாகவும் பாதுகாப்பாகவும் நடத்தும் பொறுப்பு பாதுகாப்புப் படை (4ஆம் பக்கம் பார்க்க)

## ஹெலி தாக்குதல்

நேற்று இரவு 8 00 மணியளவில் கிளாலிப் பகுதியில் சிறிலங்கா விமானப்படையின் உலங்கு வானூர்தியொன்று பரா வெளிச்சக்குண்டுகளை ஏவி கலிபர் தாக்குதல்களை நடாத்தியது; (86)

## பெறுபேறுகள் வெளியாகின

பலாலி ஆசிரிய கலாசாலையில் இருந்து 1992ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் இறுதிப் பரீட்சைக்குத் தோற்றியோரின் பெறுபேறுகள் நேற்றுக்கிடைக்கப்பெற்றுள்ளன.

மேற்படி பரீட்சைக்குத் தோற்றிய சுமார் 500 பரீட்சார்த்திகளில் சுமார் 80 வீதமானவர்கள் சித்தியடைந்துள்ளதாக அவ்வட்டாரங்கள் தெரிவித்தன. (பா)

## மண்ணெயுடன் 'றுகுணு' இன்று புறப்படும்

(யாழ்ப்பாணம்)

யாழ். குடாநாட்டிற்கான ஒரு தொகுதி மண்ணெண்ணெயுடன் கொழும்பு துறைமுகத்தில் இருந்து 'றுகுணு' கப்பல் இன்று அல்லது நாளை பருத்தித்துறையை நோக்கிப் புறப்படவுள்ளதாக யாழ் செயலக வட்டாரங்களிற்கு கிடைக்கப்பட்ட தகவலொன்று தெரிவிக்கின்றது

அங்கிருந்து புறப்படவுள்ள இக்கப்பல் வெள்ளி அல்லது சனிக்கிழமை பருத்தித்துறையை வந்துசேருமென யாழ் செயலக வட்டாரங்கள் தெரிவித்தன (பா), (நி)

## சாதாரணதர பரீட்சை காகிதாதிகள் 'குமாரி'யில்

(யாழ்ப்பாணம்)

எதிர்வரும் டிசம்பர் ஆறாம் திகதி தொடக்கம் நடைபெறவுள்ள க. பொ. த. (சா/தர) பரீட்சைக்குரிய யாழ். மாவட்ட பரீட்சை நிலையங்களிற்கான சாகிதாதிகள் ''குமாரி'' கப்பலில் எடுத்துவர நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக யாழ் கல்வித் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன.

இக் கப்பல் தற்சமயம் கொழும்புத் துறைமுகத்தில் மண்ணெண்ணெயை ஏற்றும் பணியில் ஈடுபட்டுள்ளதாக தெரிய வருகின்றது இவற்றுடன் மேற்படி காகிதாதிகளும் ஏற்றப்பட்டு அங்கிருந்து இங்கு எடுத்து வரப்படவுள்ளதாக தெரிய வருகின்றது.

[பா]

மேற்குலக நாடுகளில்

## 2 இலட்சம் தமிழர்கள் புகலிடம் கோருகின்றனர்

அண்மைக் காலத்தில் மேற்குலக நாடுகளில் அரசியல் புகலிடம் கோரி இரண்டு லட்சத்திற்கும் அதிகமான இலங்கைத் தமிழர்கள் விண்ணப்பித்துள்ளதாக கொழும்பு தூதுவராலய வட்டாரங்கள்தெரிவிக்கின்றன

கனடா, ஜேர்மனி, நோர்வே, சுவீடன், நெதர்லாந்து, பிரிட்டன், ஜப்பான், அவுஸ்ரேலியா, சுவிஸ்லாந்து ஆகிய நாடுகளிலேயே மேற்படி தொகையினர் புகலிடம் கோரியுள்ளதாக அவ் வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன

இவ்வாறு விண்ணப்பித்தோரின் விண்ணப்பங்கள் முழுமை பெறாதவையாகவும் அரசியல் புகலிடம் வழங்கக் கூடியவையாக இல்லை எனவும் தூதுவராலய வட்டாரங்கள் தெரிவிக்கின்றன

எனவே இவர்கள் தொடர் (4ஆம் பக்கம் பார்க்க)

## அடுத்த ஆண்டின் தவணை நாட்கள்

[கொழும்பு]

அடுத்த ஆண்டில் பாடசாலைகளின் கல்வித் தவணை நாட்கள் பற்றிய விபரத்தை கல்வி அமைச்சு வெளியிட்டுள்ளது. முதல்தவணை ஜனவரி மூன்றாம் திகதி முதல் ஏப்ரல் எட்டாம் திகதிவரை இருக்குமெனவும், இரண்டாம் தவணை ஏப்ரல் இருபத்தெட்டாம் திகதி முதல் யூலை இரு

கரும்புலிகள் அரங்கப் போட்டி

## வெற்றி பெற்ற கலைஞர்களுக்கு தேசியத் தலைவரின் சான்றிதழ்

(யாழ்ப்பாணம்)

விடுதலைப்புலிகள்கலைபண்பாட்டுக்கழகம் கரும்புலிகள் நாளையொட்டி நடாத்திய ... வன் நேற்று யாழ். இளங் கலைஞர் மண்டபத்தில் நடைபெற்ற பரிசளிப்பு விழாவில் வைத்து வழங்கினார்.

போரில் வீரச்சாவடைந்த போராளிகளுக்கும் உயிர்நீத்த பொதுமக்களுக்கும் மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது.

## பாரிய குற்றச் செயல்கள் பெருமளவில் வீழ்ச்சி

## புகலிடம் கோருகின்றனர்

அண்மைக் காலத்தில் மேற்குலக நாடுகளில் அரசியல் புகலிடம் கோரி இரண்டு லட்சத்திற்கும் அதிகமான இலங்கைத் தமிழர்கள் விண்ணப்பித்துள்ளதாக கொழும்பு தூதுவராலய வட்டாரங்கள்தெரிவிக்கின்றன

கனடா, ஜேர்மனி, நோர்வே, சுவீடன், நெதர்லாந்து, பிரிட்டன், ஜப்பான், அவுஸ்ரேலியா, சுவிஸ்லாந்து ஆகிய நாடுகளிலேயே மேற்படி தொகையினர் புகலிடம் கோரியுள்ளதாக அவ் வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன

இவ்வாறு விண்ணப்பித்தோரின் விண்ணப்பங்கள் முழுமை பெறாதவையாகவும் அரசியல் புகலிடம் வழங்கக் கூடியவையாக இல்லை எனவும் தூதுவராலய வட்டாரங்கள் தெரிவிக்கின்றன

எனவே இவர்கள் தொடர்

(4 ஆம் பக்கம் பார்க்க)

தற்காக மற்றுமொரு இராணுவ நடவடிக்கை மேற்...
குள இராணுவ மு காமில் நேற்று முன்தினம் இடம்பெற்ற செய்தியாளர் மாநாட்டில் இராணுவ உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்

எப்பொழுது அந்த இராணுவ நடவடிக்கை மேற்கொள்ள உத்தேசம் என்று கேட்கப்பட்டபோது 'விரைவில்' என்று மட்டும் அந்த இராணுவ அதிகாரி பதிலளித்தார்.

கிளாலி கடலேரி கடல் பயணம் எமக்கு விடுக்கப்பட்டிருக்கும் ஒரு சவால். இந்தச் சவாலை நாம் முகம் கொடுத்து வெற்றி கொள்ள வேண்டும்என்றும் அவர் குறிப்பிட்டார்.

உள்ளூராட்சித் தேர்தல் கிட்ட நெருங்கிக் கதவைத் தட்டுகிறது இதற்கு வவுனியா நகரம் தயாராகஇருக்க வேண்டும்.

வவுனியாவில் நகரசபைத் தேர்தலை அமைதியாகவும் பாதுகாப்பாகவும் நடத்தும் பொறுப்பு பாதுகாப்புப் படை

(4ஆம் பக்கம் பார்க்க)

டிசம்பர் மாதம் இறுதிப் பரீட்சைக்குத் தோற்றியோரின் பெறுபேறுகள் நேற்றுக்கிடைக்கப்பெற்றுள்ளன.

மேற்படி பரீட்சைக்குத் தோற்றிய சுமார் 500 பரீட்சார்த்திகளில் சுமார் 80 வீதமானவர்கள் சித்தியடைந்துள்ளதாக அவ்வட்டாரங்கள் தெரிவித்தன. (பா)

# பாரிய குற்றச் செயல்கள் பெருமளவில் வீழ்ச்சி

## தமிழீழ காவல்துறையினர் சாதனை

(நமது நிருபர்)

தமிழீழ காவல்துறை உருவாக்கம் பெற்று இரண்டு ஆண்டுகளை நிறைவு செய்யும் இவ்வேளையில் யாழ். குடாநாடு மற்றும் வன்னிப் பகுதிகளில் பாரிய குற்றச் செயல்கள் பெருமளவில் வீழ்ச்சியடைந்துள்ளதாக தமிழீழ காவல்துறை பொறுப்பாளர் திரு. பா. நடேசன் தெரிவித்தார்.

நேற்று மாலை நடைபெற்ற பத்திரிகையாளர் சந்திப்பின் போது அவர் இதுபற்றி விளக்குகையில் போர்க்கால சூழ்நிலைகளில் தமிழீழ மக்கள் பெரும் சொல்லொணாத்துயரங்களை அனுபவித்து வருகின்றனர். கடற்தொழிலாளர், விவசாயிகள் உட்பட பெரும்பாலானவர்கள் தமது தொழில்களை இழந்தும் சொத்துக்களை இழந்தும் அகதிமுகாம்களில் வாழ்ந்து கொண்டிருக்கின்றனர்.

இவ்வாறான சூழ்நிலைகளில் எமது மக்கள் மத்தியில் ஏற்படும் டல்வேறுபட்ட சமூகப் பிரச்சினைகள், சமூக குற்றங்கள் ஆகியவற்றைக் களைந்து சமாதனமும் சமூக நீதியும் கொண்ட ஓர் உன்னத சமுதாயத்தை கட்டியெழுப்பும் பணியில் காவல்துறை செயற்பட்டு வருகின்றது.

போர்க்கால சூழ்நிலையில் இவ்வாறு நாம் செயற்படும் போது பலவிதமான சோதனைகளுக்கு முகம் கொடுக்கின்றோம். இவ்வாறு நாம் பல்வேறுபட்ட சோதனைகளுக்கு மத்தியில் செயல்பட்டு எமது மக்களுக்கு சவாலாக இருந்த பல சமூக குற்றங்களை பெருமளவில் வீழ்ச்சியடையச் செய்துள்ளோம். இதில் பாரிய குற்றச் செயல்கள் 70 வீதத்தாலும் பெண்களுக்கெதிரான குற்றச் செயல்கள் 90 வீதத்தாலும் வீழ்ச்சியடைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது

இத்தகைய பாரிய குற்றச் செயல்கள் கடந்த இரு வருடங்களில் பெருமளவில் வீழ்ச்சியடைந்தமையானது தமிழீழ மக்கள் போராட்டத்துடன் தம்மை முழுமையாக இணைத்துக் கொண்டுள்ளமையையே எடுத்துக் காட்டுகின்றது.

வியட்நாம் போன்ற நாடுகளில் போராட்ட காலங்களில் இத்தகைய பாரிய குற்றச் செயல்கள் பலமடங்காக அதிகரித்து கட்டுப்படுத்த முடியாத அளவிற்கு இருந்ததை நாம் அறிவோம் இவற்றுடன் ஒப்பிடுமிடத்து நாம் தமிழீழ மக்களின் பூரண ஒத்துழைப்புடன் இவற்றை பெருமளவில். வீழ்ச்சியடையச் செய்வதில் வெற்றி கண்டுள்ளோம் எனத் தெரிவித்தார்

(4ஆம் பக்கம் பார்க்க)

## அடுத்த ஆண்டின் தவணை நாட்கள்!

[கொழும்பு]

அடுத்த ஆண்டில் பாடசாலைகளின் கல்வித் தவணை நாட்கள் பற்றிய விபரத்தை கல்வி அமைச்சு வெளியிட்டுள்ளது. முதல்தவணை ஜனவரி மூன்றாம் திகதி முதல் ஏப்ரல் எட்டாம் திகதிவரை இருக்குமெனவும், இரண்டாம் தவணை ஏப்ரல் இருபத்தெட்டாம் திகதி முதல் யூலை இருபத்தொன்பதாம் திகதி வரை நீடிக்குமெனவும், மூன்றாம் தவணை செப்டம்பர் 2ஆம் திகதி முதல் டிசம்பர் முதலாம் திகதி வரை நீடிக்குமெனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

## நாளைசந்திப்பு

இங்குள்ள சமாதான நீதிபதிகள், மொழிபெயர்புத் தொழில் புரிபவர்கள், நில அளவையாளர்களுக்கான முக்கிய சந்திப்பு நாளை புதன் கிழமைகாலை 10. 00மணிக்கு நீதிநிர்வாகத்துறையின்நடுவப் பணியகத்தில் நடைபெற இருப்பதால் அனைத்து சமாதான நீதிபதிகளையும், மொழிபெயர்ப்புத் தொழில் புரிபவர்களையும், நில அளவையாளர்களையும் சமுகமளிக்குமாறு தமிழீழ நீதி நிர்வாகத்துறையினர் கேட்டுக்கொள்கின்றனர்.

## கரும்புலிகள் அரங்கப்போட்டி

# வெற்றி பெற்ற கலைஞர்களுக்கு தேசியத் தலைவரின் சான்றிதழ்

(யாழ்ப்பாணம்)

விடுதலைப்புலிகள்கலைபண்பாட்டுக்கழகம் கரும்புலிகள் நாளையொட்டி நடாத்திய அரங்கப்போட்டிகளில் வெற்றி பெற்றோருக்கு தேசியத்தலைவர் வே. பிரபாகரனால் ஒப்பமிடப்பட்ட சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.

இச் சான்றிதழ்களையும் பரிசில்களையும் அரசியல் துறைப் பொறுப்பாளர் தமிழ்ச்செல்வன் நேற்று யாழ். இளங் கலைஞர் மண்டபத்தில் நடைபெற்ற பரிசளிப்பு விழாவில் வைத்து வழங்கினார்.

யாழ்மாவட்ட கலைபண்பாட்டுக்கழகப் பொறுப்பாளர் அன்பரசன் தலைமையில் நடைபெற்ற விழாவில் யாழ் மாவட்டத்தளபதி அன்பு, மகளிர்படைத்தளபதி விதுஷா ஆகியோர் ஈகைச்சுடரேற்றினர் தொடர்ந்து மண்மீட்புப் போரில் வீரச்சாவடைந்த போராளிகளுக்கும் உயிர்நீத்த பொதுமக்களுக்கும் மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது.

வரவேற்புரையை கலைபண்பாடடுக் கழகத்தைச் சேர்ந்த செல்வி கலைமணி நிகழ்த்தினார் அன்பரசனின் தலைமை உரையை அடுத்து சிறப்புரைகளை கலைபண்பாட்டுக்கழக துணைப்பொறுப்பாளர் சேர

(4 ஆம் பக்கம் பார்க்க)

# சக்திவாய்ந்த டாங்கிகள் வாங்குவதுகுறித்து ஆராய்வு

(கொழும்பு)

சிறிலங்கா இராணுவத்திற்கென புதிதாக அதிசக்தி வாய்ந்த இராணுவ டாங்கிகளைக் கொள்வனவு செய்யும் நடவடிக்கையில் சிறிலங்கா படைத்துறை ஈடுபட்டு வருகின்றது.

யாழ்தேவி நடவடிக்கையின் போது பாவித்த ரி-55 ரக டாங்கிகள் அவ்வளவு சக்தி வாய்ந்தன அல்ல எனஇராணுவம் கருதுகிறது. எனவே இதனைவிட கூடிய சக்தியுள்ள டாங்கிகளைக் கொள்வனவு செய்வது குறித்து சிறிலங்கா இராணுவவட்டாரங்கள் தீவிரமாக ஆராய்ந்தன

( 4 ஆம் பக்கம் பகர்க்க)

## கதிரை எனது சின்னமல்ல கையே எனது சின்னம்

அநுரா தெரிவிப்பு

(கொழும்பு)

நான் எனது கட்சியின் நிறத்தையோ அல்லது சின்னத்தையோ மாற்றிக்கொள்ளவில்லை என்று சுதந்திரக் கட்சியின் முன்னாள் தேசிய அமைப்பாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான அநுரா பண்டார நாயக்கா கூறியுள்ளார்.

கட்டுநாயக்க சர்வதேச விமானநிலையத்தில் லண்டனுக்குப் புறப்படும் முன்பாக நிருபர்கள் மத்தியில் பேசினார். அப்போது அவர் எனது நிறம் எப்போதும் நீலமாகவும் எனது சின்னம் எப்போதும் கையாகவுமே இருக்கிறது. கதிரை எனக்குரிய சின்னமல்ல என்றும் தெரிவித்தார்.

மீண்டும் சுதந்திரக் கட்சியில் இணைவீர்களா எனக் கேட்டபோது அதுவும் நடக்கலாம் எனப் பதிலளித்தார்.

அநுராவை வழியனுப்ப அவரது ஆதரவாளர்கள் மற்றும் நலன்விரும்பிகள் எனப் பெரும் தொகையானோர் விமானநிலையத்திற்கு வந்திருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# படகுமீது எறிகணை வீச்சு ஓட்டி உடல் சிதறிப் பலி

## ஆலங்கேணிக் கரையில் பரிதாபம்

(வடமராட்சி)

ஆனையிறவு இராணுவ முகாமிலிருந்து ஆலங்கேணி நோக்கி நடாத்தப்பட்ட எறிகணைத்தாக்குதலால் படகோட்டி ஒருவர் அந்த இடத்திலேயே பலியானார்.

நேற்று அதிகாலை 12 30 மணியளவில் நடாத்தப்பட்ட எறிகணை வீச்சுக்கே இன்பருட்டியை சேர்ந்த செல்வநாயகம் ரஞ்சகுமார் (வயது 18) என்னும் இளைஞர் பலியாக நேரிட்டது.

பொருள்களை ஏற்றி வருவதற்காக ஆலங்கேணி கரையை நோக்கிச் சென்ற இவர் அக்கரையில் படகைக் கட்டிவிட்டு படகில் நித்திரை செய்து கொண்டிருந்தார். அப்பொழுது ஆனையிறவிலிருந்து ஏவப்பட்டஎறிகணையொன்று இவரின் படகின் மீது வீழ்ந்து வெடித்ததனால் இவர் உடல் சிதறி பலியானார். அவரது படகும் சேதமடைந்து மூழ்கியது. (யோ)

## வரவு செலவு-திட்டத்திற்கு தனியான திணைக்களம்

தேசிய வரவு செலவு திட்ட திணைக்களம் என்ற பெயரில் புதிய திணைக்களம் ஒன்று இம் மாதம் முதலாம் திகதி முதல் நிதியமைச்சின் கீழ் செயற்பட ஆரம்பித்துள்ளது.

இத் திணைக்களத்திற்கான செலவினங்களை ஈடு செய்வதற்காக நிதி இராஜாங்க அமைச்சர் ஹறோல்ட் ஹேரத் நேற்றுக் காலை

( 4 ஆம் பக்கம் பார்க்க)

## வெட்டுப்புள்ளியை கண்டித்து கிளிநொச்சியில் பேரணி

[கிளிநொச்சி]

சிறிலங்கா அரசு தமிழ் மாணவர்கள் மீதான திட்டமிட்ட வெட்டுப்புள்ளி முறையைக் கண்டித்து இன்று கிளிநொச்சியில் மாபெரும ஆர்ப்பாட்டப் பேரணியும் கண்டனப் பொதுக் கூட்டமும் நடைபெறவுள்ளது.

யாழ் பல்கலைக் கழகத்தின் கிளிநொச்சி விவசாயபீட மாணவர்களும் கிளிநொச்சி மாவட்ட பாடசாலை மாணவர்களும் இணைந்து இவ் ஆர்ப்பாட்டப் பேரணியையும் கண்டனப் பொதுக் கூட்டத்தையும் நடாத்துகின்றனர்.

இன்று கிளிநொச்சி கந்தசாமி கோவிலடியில் ஆரம்பமாகும் இவ் ஆர்ப்பாட்ட பேரணி கிளிநொச்சி கல்வி திணைக்களத்தில் முடிவடையவுள்ளது.

இதன்பின் அங்கு கண்டனப் பொதுக் கூட்டம் நடைபெறவுள்ளது. முன்னொருபோதும் இல்லாதவாறு தமிழ் மாண

(4 ஆம் பக்கம் பார்க்க)

### தங்கையே!...

நீ... பெரும் தீ
உலகப் பெண்களுக்கு உதாரணம்
தமிழீழம் உன்னால் தலை நிமிர்கிறது
களத்துக்குவா கைவிலங்கை உடைக்கலாம்

## வரி விளம்பரம்

**புலமைப் பரிசில் பயிற்சி**

வெளிவந்து விட்டது! ஆவலோடு எதிர்பார்த்த புலமைப் பயிற்சி நூல் 21 நவீன கட்டுரைகளையும் 10 மாதிரி வினாத்தாள்களையும் [விடையுடன்] தமிழ், கணிதப்புதிர்களையும்கொண்டது. தொகையாக எடுப்பவர்களுக்குவிஷேட கழிவு உண்டு. புதிய கல்வி நிலையம் 219, நாவலர்வீதி, யாழ்ப்பாணம். [6384]

**30 Model Essays**

T. Thuraisingham&K. Balasingam விற்பனையாகிறது. பூபாலசிங்கம் புத்தகசாலை. (சி-7733)

**வகுப்புகள்**

ஓவிய, சிற்ப நுண்கலை வகுப்புகள் ஆரம்பமாகின்றன. மாணவருக்கும் ஏனையோருக்கும் வெவ்வேறு பிரிவுகள். இல: 6 பென்தகொஸ்தே வீதி, கச்சேரியடி. (6357)

**நல்லின பலாக் கன்று இலவசம்**

5ஜாம் போத்தல்களை எமது நிறுவனத்தில் ஒப்படைத்து அதற்குரிய பணம் ரூபா 25/- பெற்றுக் கொள்வதுடன் நல்லின பலாக் கன்றை இலவசமாக எடுத்துச் செல்லுங்கள். ரேஸ்ட்லைன் இன்டஸ்ரீஸ், (தனி) லிமிட்டட். [சி/7782]

### பாதிக்கப்பட்டோர் புனர்வாழ்வு

# பாரிய நிதி உதவி வழங்க கனடா பின்னடிப்பு

(மட்டக்களப்பு)

கடந்தகால சிறிலங்கா இராணுவ நடவடிக்கைகளால் பாதிக்கப்பட்ட மக்களுக்குத் தேவையான உதவிகளை இலங்கை அரசுதான் வழங்க வேண்டும். வீடமைப்பு போன்ற பாரிய உதவிகளை வழங்கக்கூடிய நிலையில் நாம் இல்லை. தொழிற்பயிற்சி போன்ற உதவிகளைத் தான் நாம் வழங்கமுடியும்.

இவ்வாறு மட்டக்களப்பிற்கு விஜயம் செய்த கனேடிய தூதரக அபிவிருத்தி முதலாவது செயலாளர் யூலியன்முறே மட்டக்களப்பு மேலதிக அரச அதிபர் த. அருணகிரிநாதனைச் சந்தித்துப் பேசுகையில் தெரிவித்தார்.

மட்டக்களப்பு கச்சேரிக்கு சென்று மேலதிக அரச அதிபரைச்சந்தித்த அவர் நிவாரண நடவடிக்கைகள் குறித்து விபரம் கேட்டார். அதற்குப் பதிலளித்து மேலதிக அரச அதிபர் கூறியதாவது;

மட்டக்களப்பு மாவட்டத்தில் இப்போது மீள் குடியேற்றம் நடைபெறுகிறது. மீளக் குடியமரும் மக்களுக்கு உடனடி நிவாரணமாக 6 ஆயிரம் ரூபா வழங்கப்படுகிறது.

ஆனால் அவர்களுக்கு இருப்பிடவசதி செய்து கொடுக்கப் படுவதில்லை, வீடமைப்பு நிவாரணம் வழங்குவதற்குரிய நிதி இன்னமும் கொழும்பிலிருந்து கிடைக்கவில்லை. மீளக் குடியமரும் மக்களுக்கு வீடமைப்பு, தொழில்வசதி சமையல் பாத்திரம் ஆகியவற்றுக்கான மூன்று நிவாரணங்களும் ஒரே தடவையில் வழங்கப்படவேண்டும். சுயதொழிலுக்கான உதவிகளும் வழங்கப்படவேண்டும். அத்துடன் இங்கு கூடுதலாகவுள்ள விவசாயிகளுக்கு எதுவித நிவாரணமும் வழங்கப்படவில்லை எனவும் அவர் தெரிவித்தார்.

## படையினரின் தடை உத்தரவினால் பாதிக்கப்பட்டோருக்கு நிவாரணம்

**- வந்தாறுமூலைவிவசாயிகள் கோரிக்கை**

படையினரின் தடை உத்தரவினால் பாதிக்கப்பட்டிருக்கும் விவசாயிகளுக்கு நிவாரணம் வழங்கப்பட வேண்டுமென்று வந்தாறுமூலை கிராம விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர். ஏறாவூர் பற்று பிரதேச செயலாளர் பிரிவின் கீழ்வரும் சந்தணமடு, வண்ணாத்தி ஆறு, மாவடிஓடை பிரதேசங்களில் உள்ள சுமார் 10,000 ஏக்கருக்கு மேற்பட்ட விளைநிலங்களில் பயிர் செய்யக்கூடாதென்று இராணுவம் தடை விதித்திருப்பது தெரிந்ததே. இப் பிரதேசங்களில் நெற்செய்கை மட்டுமன்றி, கால்நடை வளர்ப்பு, சேனைப் பயிர்ச்செய்கை என்பனவும் பாதிக்கப்பட்டிருப்பதால் தொழிலிழந்து துன்பப்படும் மக்களுக்கு நிவாரணம் வழங்கப்பட வேண்டுமெனவும் அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

## முக்கிய அறிவித்தல்

### அங்கத்தவர் கவனத்துக்கு

**கால் நடைவளர்ப்போர் கூட்டுறவுச் சங்கம்(வரைவுள்ளதுபதிவு இல.யா,2061)**

### வலிவடக்கு — வலிதெற்குப்பிரிவு

### கிளைக்குழு வாக்காளர் பட்டியல் காட்சிப்படுத்தல்

மேற்படி சங்க அங்கத்துவ வாக்காளர் பட்டியல் கிளைகள் ரீதியாகத் தயாரிக்கப்பட்டு 27-10-93ம் திகதி தொடக்கம் 05-11-93-ம் திகதிவரை சுன்னாகத்தில் அமைந்துள்ள எமது சங்கக் காரியாலயத்தில் பார்வைக்குத் தொங்க விடப்படும். அங்கத்தவர்கள் திருத்தங்கள், ஆட்சேபனைகள் ஏதும் இருப்பின் 5-11 93 ம் திகதிக்குள் எழுத்து மூலம் சமர்ப்பிக்கும்படி கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

| இல. | கிளையின் பெயர் | | தொழில் பரப்புக்குரிய கி சே. பிரிவுகள் |
|---|---|---|---|
| 1. | தெல்லிப்பழை வடமேற்கு | — | யா/221, யா/222, யா/226, |
| 2. | தெல்லிப்பழை தென்மேற்கு | — | யா/223, யா/224, யா/230, |
| 3. | தெல்லிப்பழை | — | யா/227 யா/228, யா/229, |
| 4. | வீமன்காமம் | — | யா/236, யா/237, யா/246 |
| 5. | காங்கேசன்துறை | — | யா/233, யா/234, யா/235, |
| 6. | மாவிட்டபுரம் | — | யா/225, யா/231, யா/232' |
| 7. | தையிட்டி | — | யா/247, யா/249, யா/250, |
| 8. | மயிலிட்டித்துறை | — | யா/248, யா/251, யா/255, |
| 9. | தென்மயிலை குரும்பசிட்டி | — | யா/240, யா/242, யா/243, |
| 10. | பலாலி தெற்கு, வசாவிளான் | — | யா/244, யா/245, யா/252, |
| 11. | பலாலி | — | யா/253, யா/254, யா/256, |
| 12. | கட்டுவன் | — | யா/241, யா/238, யா/239, |
| 13. | அளவெட்டி வடக்கு | — | யா/215, யா/216, யா/218, |
| 14. | அளவெட்டி தெற்கு | — | யா/217, யா/219, யா/220 |
| 15. | மல்லாகம் | — | யா/212, யா/213, யா/214, |
| 16. | உடுவில் | — | யா/184, யா/185, யா/186, |
| 17. | சுன்னாகம் கிழக்கு | — | யா/195, யா/196, யா/197, |
| 18. | சுன்னாகம் மேற்கு | — | யா/198, யா/199, யா/200, |
| 19. | ஏழாலை வடக்கு | — | யா/204, யா/205, யா/206, |
| 20. | ஏழாலை தெற்கு | — | யா/201, யா/202, யா/203, |
| 21. | புன்னாலைக்கட்டுவன் | — | யா/207, யா/208. யா/209, |
| 22. | குப்பிளான் | — | யா/210, யா/211, |

### இடைக்காலப் பணிப்பாளர் சபை

தெல்லிப்பழை கால் நடை வைத்தியர்
காரியாலயம் — சுன்னாகம்
25-10-1993 (6383)

## தொண்டர் நிறுவன பொறுப்பாளர் வவுனியா நகரில் கடத்தப்பட்டார்

(வவுனியா)

சேவாலங்கா எனப்படும் தொண்டர் ஸ்தாபனத்தின் வவுனியா செயலகப் பொறுப்பாளராகக் கடமையாற்றிய தமிழ் இளைஞர் ஒருவர் நள்ளிரவு நேரத்தில் அவரது வீட்டிலிருந்து கத்தி முனையில் கடத்தப்பட்டுள்ளார்.

வெள்ளைநிற வான் ஒன்றில் வந்த ஆறுபேர் கதவைத் தட்டி இவரைக் கூப்பிட்டு கத்தியைக்காட்டி பயமுறுத்தி விட்டு வானில் கடத்திச் சென்றுள்ளனர் ரீசேட்டினால் ஆறுபேரும் முகத்தை மறைத்து இருந்தமையால் அடையாளம் காணமுடியாமல் போய்விட்டதாக வவுனியா பொலிஸ் நிலையத்தில் இது தொடர்பாக செய்யப்பட்ட புகாரில் தெரிவிக்கப்பட்டுள்ளது

**கண்காட்சி**

புங்குடுதீவு ஸ்ரீ கணேச மகா வித்தியாலயத்தின் பாடசாலை மட்ட வாழ்க்கைத்திறன் ஆரம்பபிரிவுகட்கான பொருட்காட்சி நாளை புதன் கிழமை காலை 8 மணிக்கு தொடங்கும்.

**வட-பிராந்திய யாழ். ஆங்கில மருந்து வர்த்தக சங்கம்**

## நன்றி நவிலல்

16-10 93இல் நடைபெற்ற கலை நிகழ்ச்சியில் ஒத்துழைப்பு வழங்கிய தமிழீழ அரசியல் துறையினர், யாழ். மாவட்ட அரசியல்துறை பொறுப்பாளர், யாழ். வட்ட அவை பொறுப்பாளர், காவல்துறை பொறுப்பாளர், காவல் துறையினர், சென்ஜோன்ஸ் அம்புலன்ஸ் சங்கத்தினர், சென்பற்றிக்ஸ் கல்லூரி அதிபர், சாண்டோ எம். துரைரெத்தினம், அவரின் மாணவர்கள், மோகன்மாஸ்ரர், அவரின் மாணவர்கள், கலை பண்பாட்டுக் கழகப் பொறுப்பாளர், நாடகக் குழுவினர், யாழ் வர்த்தகசங்கத் தலைவர், உறுப்பினர்கள், நல்லூர் வர்த்தகசங்கத் தலைவர், உறுப்பினர்கள், சுருட்டுத் தொழிலாளர் சங்கத் தலைவர், தொழிலாளர்கள், வட பிராந்திய வர்த்தக

## 31-ம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

மலர்வு: 4 — 11 — 1917



உதிர்வு: 27 — 9 — 1993

அமரர் உயர்திரு

### தம்பையா சதாசிவம்

(முன்னாள் பம்பலப்பிட்டி இந்துக்கல்லூரி அதிபர்)

பண்பின் இருப்பிடமாய், பாசத்தின் சிகரமாய், அன்பின் திருவுருவாய், எம் குடும்பத்தின் ஒளிவிளக்காய் திகழ்ந்து எங்கள் அனைவருக்கும் வழிகாட்டிய அன்புத் தெய்வமே! நீங்கள் எங்களை விட்டுப் பிரிந்தாலும் உங்கள் நினைவலைகள் என்றும் எங்கள் இதயத்தில் அணையாத தீபமாய்ப் பிரகாசித்துக் கொண்டிருக்கும். ஆவி பிரியும் நிலையிலும் அம்பலக் கூத்தனை அழைத்தீர்கள். நீங்கள் அவன் பாதம் அடையவும், உங்கள் ஆத்மா சாந்தியடையவும் இறையருள் வேண்டுகின்றோம்.

அத்துடன் அன்னாரின் 26-10-93இல் நடைபெறவிருக்கும் அந்தியக் கிரியைகளிலும், 27-10-93இல் நிகழவிருக்கும் சபண்டீகரண வைபவத்திலும், மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் பணிவன்புடன் அழைக்கின்றோம்.

அன்னாரின் பிரிவால் வாடும்
அன்பு மனைவி, மகள்

இல. 24,
புங்கன்குளம் வீதி,
கொழும்புத்துறை. (6381)

## நினைவு கூருகின்றோம்:..

## 1993- 10- 26

1984 ஆம் ஆண்டு இதேதினத்தில் அக்கரைப்பற்றுப் பகுதியில் தேசவிரோதிகளால் சுடப்பட்டு வீரச்சா

5. காங்கேசன்துறை — யா/233, யா/234, யா/235,
6. மாவிட்டபுரம் — யா/225, யா/231, யா/232'
7. தையிட்டி — யா/247, யா/249, யா/250,
8. மயிலிட்டித்துறை — யா/248, யா/251, யா/255,
9. தென்மயிலை குரும்பசிட்டி — யா/240, யா/242, யா/243,
10. பலாலி தெற்கு, வசாவிளான் — யா/244, யா/245, யா/252,
11. பலாலி — யா/253, யா/254, யா/256,
12. கட்டுவன் — யா/241, யா/238, யா/239,
13. அளவெட்டி வடக்கு — யா/215, யா/216, யா/218,
14. அளவெட்டி தெற்கு — யா/217, யா/219, யா/220
15. மல்லாகம் — யா/212, யா/213, யா/214,
16. உடுவில் — யா/184, யா/185, யா/186,
17. சுன்னாகம் கிழக்கு — யா/195, யா/196, யா/197,
18. சுன்னாகம் மேற்கு — யா/198, யா/199, யா/200,
19. ஏழாலை வடக்கு — யா/204, யா/205, யா/206,
20. ஏழாலை தெற்கு — யா/201, யா/202, யா/203,
21. புன்னாலைக்கட்டுவன் — யா/207, யா/208, யா/209,
22. குப்பிளான் — யா/210, யா/211,

## இடைக்காலப் பணிப்பாளர் சபை

தெல்லிப்பழை கால் நடை வைத்தியர்
காரியாலயம் — சுன்னாகம்
25-10-1993

(6383)

---

## 3-ம் ஆண்டு நினைவு 2-ம் ஆண்டு நினைவு

1993-10.26



திருமதி
**சூசைப்பிள்ளை மேரிதிரேசா**
[பவளம்]
பிறப்பு: 26-05-1926
இறப்பு: 26-10-1990

அன்பின் இருப்பிடமாய்
பண்பின் பிறப்பிடமாய்
பாசத்தின் இலக்கணமாய்
குடும்பத்தின் ஒளிவிளக்காய்
திகழ்ந்த எங்கள் அருமை அம்மாவே
எம்மை ஆளாத்துயரில் ஆழ்த்திவிட்டு
மீளாத்துயில் கொண்டதேனோ?
ஆண்டு மூன்று சென்றாலும்
என்றென்றும் எங்கள் நெஞ்சத்தில்
நீங்காது இடம்பிடித்தாய் அம்மா.



**வீரவேங்கை கார்த்திகா**
**சூசைப்பிள்ளை மேரிகனிஸ்ரா**
(றமணி)
தோற்றம்: 03-05-1964
மறைவு: 27 07-1991

,ண்டு இரண்டு சென்றதம்மா
உந்தன் - அழகு முகம் மறைந்ததம்மா
மாலையுடனும் மஞ்சள் குங்குமத்துடனும்
மணக்கோலம் காண்போம் என இருக்க
பெற்றாரும் உற்றாரும் கண்ணீர் சிந்தி
பேராறாய் பெருகுகிறதே
பெற்றவயிறு பற்றியெரிய பிரிந்துவிட்டாயே
பேசுங்கிளியே, தங்கச் சிலையே
துடிக்கிறோம் அம்மா.

இவர்களின் ஆன்ம இளைப்பாற்றிற்காக நாவாந்துறை பரலோக மாதா ஆலயத்தில் 26-10-93 இன்றுகாலை 5 30 மணிக்கு இரங்கற் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும். அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

இவரின் பிரிவால் வாடும்
கணவன், சகோதரி, பிள்ளைகள்,
பேரப்பிள்ளைகள்.

(6347)

இவரின் பிரிவால் வாடும்,
தந்தை, அண்ணன்மார், அக்காமார்,
அண்ணிமார், பெறாமக்கள், அத்தான்மார்.

---

விட்டு வானில் கடத்திச் சென்றுள்ளனர் ரீசேட்டினால் ஆறு

காட்சி நாளை புதன் கிழமை காலை 8 மணிக்கு தொடங்கும்.

---

### வட-பிராந்திய யாழ். ஆங்கில மருந்து வர்த்தக சங்கம்

## நன்றி நவிலல்

16-10 93இல் நடைபெற்ற கலை நிகழ்ச்சியில் ஒத்துழைப்பு வழங்கிய தமிழீழ அரசியல் துறையினர், யாழ். மாவட்ட அரசியல்துறை பொறுப்பாளர், யாழ். வட்ட அவை பொறுப்பாளர், காவல்துறை பொறுப்பாளர், காவல் துறையினர், சென்ஜோன்ஸ் அம்புலன்ஸ் சங்கத்தினர், சென்பற்றிக்ஸ் கல்லூரி அதிபர், சாண்டோ எம். துரைரெத்தினம், அவரின் மாணவர்கள், மோகன்மாஸ்ரர், அவரின் மாணவர்கள், கலை பண்பாட்டுக் கழகப் பொறுப்பாளர், நாடகக் குழுவினர், யாழ் வர்த்தகசங்கத் தலைவர், உறுப்பினர்கள், நல்லூர் வர்த்தகசங்கத் தலைவர், உறுப்பினர்கள், சுருட்டுத் தொழிலாளர் சங்கத் தலைவர், தொழிலாளர்கள், வட பிராந்திய வர்த்தக சங்கங்களின் சமாஜம், அதன் தலைவர், செயலர், ஒலி ஒளி அமைப்பாளர், நிகழ்ச்சித் தொகுப்பாளர், ''ஈழநாதம்'', ''உதயன்'', ''தாசன்'' அச்சகத்தார், யாழ். பல்கலைக்கழக விரிவுரையாளர், உள்ளூராட்சி ஆணையாளர், யாழ். மாவட்ட தொழிற்சங்கப் பொறுப்பாளர், நிதித்துறைப் பொறுப்பாளர் மற்றும் வர்த்தகர்கள், பொதுமக்கள் அனைவருக்கும் மனமுவந்த நன்றிகளை தெரிவித்துக் கொள்கின்றோம்.

செயலாளர்

(சி-7779)

---

## 1-ம் ஆண்டு நினைவு நாள்



மண்ணுலகில்
10- 02- 1934
விண்ணுலகில்
06- 11- 1992

அமரர்
**T. P. பத்மநாதன்**
(இளைப்பாறிய மகாஜனா கல்லூரி நூலகரும் விளையாட்டு பயிற்றுனரும்)
**ஆண்டு திதி: 26- 10- 1993**

நினையாத நேரம் அணைந்த எமது குடும்பத்தின் ஒளிவிளக்காகவும், எமது உயர் வாழ்வுக்கு வழிகாட்டியாகவும் விளையாட்டு துறையையே மூச்சாகவும் கொண்டு விளங்கிய எமது குலதெய்வத்தின் ஆத்ம சாந்தி வேண்டி பிரார்த்திக்கிறோம்.

தெல்லிப்பழை.
(6380)

மனைவி, மக்கள்,
மருமகன்.

---

உங்கள் நினைவலைகள் என்றும் எங்கள் இதயத்தில் அணையாத தீபமாய்ப் பிரகாசித்துக் கொண்டிருக்கும். ஆவி பிரியும் நிலையிலும் அம்பலக் கூத்தனை அழைத்தீர்கள். நீங்கள் அவன் பாதம் அடையவும், உங்கள் ஆத்மா சாந்தியடையவும் இறையருள் வேண்டுகின்றோம்.

அத்துடன் அன்னாரின் 26-10-93இல் நடைபெறவிருக்கும் அந்தியக் கிரியைகளிலும், 27-10-93இல் நிகழவிருக்கும் சபண்டீகரண வைபவத்திலும், மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் பணிவன்புடன் அழைக்கின்றோம்.

அன்னாரின் பிரிவால் வாடும்
அன்பு மனைவி, மகள்

இல. 24,
புங்கன்குளம் வீதி,
கொழும்புத்துறை.

(6381)

---

## நினைவு கூருகின்றோம்..
## 1993- 10- 26

1984 ஆம் ஆண்டு இதேதினத்தில் அக்கரைப்பற்றுப் பகுதியில் தேசவிரோதிகளால் சுடப்பட்டு வீரச்சாவெய்திய

**★சபாபதிப்பிள்ளை அழகையா** (தம்பிலுவில்-அம்பாறை)

1986ஆம் ஆண்டு இதேதினத்தில் பூநகரிப்பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினருடனான நேரடிச்சமரில் வீரச்சாவெய்திய

**யபஸ்** [.          .]

1987ஆம் ஆண்டு யாழ் கொக்குவில், குளப்பிட்டிச் சந்தியில் இந்தியப்படையினருடனான சமரில் வீரச்சாவெய்திய

**குட்டி** (கனகராசா பிறேமன்ராஜ்-75, மணிக்கூட்டுவீதி-யாழ்)

திருமலை - குச்சவெளி, பேராறுப்பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரில் வீரச்சாவெய்திய,

**குமாரதாஸ்** (காளிராஜா ஞானசேகரம்-லிங்கநகர்-திருமலை)

யாழ் சூறாவத்தை, அளவெட்டி, புத்தூர் ஆகிய பகுதிகளில் இந்தியப்படையினரால் படுகொலை செய்யப்பட்ட 10 தமிழர்கள்.

1988ஆம் ஆண்டு பாவற்குளத்தில் சிறிலங்காப் படையினரால் சுட்டுக் கொல்லப்பட்ட 4 தமிழர்கள்.

சாவகச்சேரியில் இந்தியப்படை மற்றும் தேசவிரோதிகளால் படுகொலை செய்யப்பட்ட தென்மராட்சி பிரஜைகள் குழுத்தலைவரும், சட்டத்தரணியும் நாட்டுப்பற்றாளருமான-

**இராசசங்கரி** (சாவகச்சேரி)

1989ஆம் ஆண்டு மன்னாரில் தேசவிரோதிகளால் சுட்டுக் கொல்லப்பட்ட, கரடிக்குழி, மறிச்சுக்கட்டி பகுதிகளைச் சேர்ந்த 03 தமிழர்கள்

1992ஆம் ஆண்டு மன்னார் – உயிலங்குளம் சிறிலங்கா இராணுவக் காவலரண்மீதான தாக்குதலில் வீரச்சாவெய்திய

**லெப் நிரோஜ்** (உதயகுமார்ரஞ்சித் வந்தாறுமூலை-மட்டு)
**லெப் சசிக்குமார்** (பிலிப்ஸ் டயஸ் தியோனிடயஸ் தாழ்வுப்பாடு-மன்னார்)
**லெப் இறையனார்** (பேதுறு செபமாலை வங்காலை-மன்னார்)

மட்டு சத்துருக்கொண்டான் ஏரியில் மீன்பிடித்துக் கொண்டிருந்த மீனவர் மீது சிறிலங்கா காவல்துறையினர் சுட்டதில் பலியானவர்கள்

**ஆகியோரை இந்நாளில் நினைவு கூருகின்றோம்**

★ இக்குறியிடப்பட்ட மாவீரர் ஈரோஸ் அமைப்பு இயங்கிய காலத்தில் அதனுடன் இணைந்து செயற்பட்டவராவர்

## தமிழீழ விடுதலைப் புலிகள்

(சி-7778)

நல்லூர் இளை நூலகம்
மன்றம்
யாழ்ப்பாணம்

சிந்தனைக்கு

உன் நடத்தையின் நெறி உலகம் முழுவதற்கும் உகந்த சட்டமாக ஆகக் கூடிய நிலையில் நீ நடந்து கொள்.

— இம்மேன்யல் கான்ட்

ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம் 26-10-1993
தொலைபேசி
ஆசிரியபீடம் 025 - 2839 நிர்வாக பீடம் 2023
த பெ எண் - 05

## 'விட்டில்' பூச்சிகளாக......

தென்னிலங்கையில் மீண்டுமொரு கடத்தல் நாடகத்தை சிறிலங்கா அரசு தொடங்கியுள்ளது. ஆனால், முன்னர் சிங்கள இளைஞர்களையும், யுவதிகளையும் வேட்டையாட பயன்படுத்தப்பட்ட இவ் ஆட்கடத்தல் வழிமுறை தற்பொழுது தமிழ் இளைஞர்களையும், யுவதிகளையும் கொன்றொழிக்கும் திட்டமாக மாற்றம் பெற்று வந்துள்ளது.

அண்மைக்காலம்வரை கைது செய்தல், சித்திரவதை செய்தல், சிறையில்/தடை முகாம்களில் அடைத்துவைத்தல் என நடைமுறைப் படுத்தப்பட்டு வந்த தமிழருக்கு எதிரான நடவடிக்கைகள், தற்பொழுது புதிய பரிணாமத்தைப் பெற்றுள்ளது. கொழும்பிலுள்ள சில தமிழ்க் குழுக்களே பாராளுமன்றத்திலும், உலக செய்தி ஸ்தாபனங்களிலும் அலறும் அளவிற்கு அரசின் இந்நடவடிக்கை தமிழர் மத்தியில் அச்சத்தை ஊட்டியுள்ளது

1988ஆம், 1989ஆம் ஆண்டுகளில் தென்னிலங்கையில் இலக்கத் தகடில்லாத வாகனங்களில் சென்று அரசிற்கு எதிரானவர்களென சந்தேகப்படுபவர்களை கடத்தி வந்து படுகொலை செய்வதும், பின்னர் வீதிகளிலோ, ஆறுகளிலோ வீசி எறிவதோ, அன்றி டயர் போட்டு எரிப்பதோ சர்வசாதாரண நிகழ்ச்சியாகவே இருந்தது. இது குறித்து அரசு மீது குற்றம் சாட்டிய போது அரசு அதனை நிராகரித்தது. கொலைக்கும் தமக்கும் தொடர்பில்லை எனவும் சாதித்தது. ஆனால் காலப் போக்கில் அரசாங்கம் உருவாக்கிய சட்டபூர்வமற்ற கொலைக்கும்பலே இக்கொலைகளுக்குக் காரணம் என உறுதி செய்யப்பட்டது.

இந்நிலையில் மீண்டும் தென்னிலங்கையில் ஆள் கடத்தல் சம்பவங்கள் இடம்பெறத் தொடங்கியுள்ளன. ஆனால் கடந்த காலத்தைப் போலவே அரசாங்கம் இதையும் மறுக்கக் கூடும். ஆனால், அது சாத்தியமானதாகவும், நம்பகத்தன்மை கொண்டதாகவும் ஒரு போதும் இருக்கப்போவதில்லை.

அண்மைக்காலத்தில் குறிப்பாக கொழும்பிலும், அதன் புறநகர் பகுதிகளிலும் வகைதொகையின்றியும், காரண காரியம் இன்றியும் தமிழர்கள் கைது செய்யப்பட்டு வருகின்றார்கள். விடுதலைப்புலிகள் என்ற சந்தேகத்தின் பேரிலேயே கைது செய்யப்படுவதாக அர

## 3000 ஆசிரியர்கள் அடுத்தவருடம் நியமனம்

(கொழும்பு)

எதிர்வரும் ஜனவரி மாதம் முதல் சகல பாடசாலைகளிலும் பயிற்றப்பட்ட 3000பேர் ஆசிரியர்களாக நியமிக்கப்படுவார்கள் என கல்விச் சேவைச் சபை அறிவித்துள்ளது.

இவர்களுள் 2500பேர் ஆங்கில ஆசிரியர்களாக நியமனம் பெறுவர். ஏனைய 500 பேர் விவசாய ஆசிரியர்களாக நியமனம் பெறுவர். இப்பேது 2245பேர் ஆங்கிலப் பயிற்சி நெறியில் சேர்ந்து பயிற்சி பெற்று வருவதாக கல்விச் சேவை சபைதெரிவிக்கின்றது. விவசாயடிப்ளோமா பட்டதாரிகளிலிருந்தே விவசாய ஆசிரியர்கள் தேர்ந்தெடுக்கப்படுவார்கள் எனவும் தெரிவிக்கப் பட்டுள்ளது.

## காணாமல்போன 9 தமிழர்; நெதர்லாந்து விபரம் கோருகிறது

(கொழும்பு)

1990 ஆம் ஆண்டு ஒக்ரோபர் 19 ஆம் திகதி பொத்துவிலில் சிறிலங்கா இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டுக்காணாமல் போன ஒன்பது தமிழர்களின் விபரங்களையும் தருமாறு நெதர்லாந்து நாட்டு சர்வதேச மன்னிப்புச் சபையின் 157 - வது பிரிவு சிறிலங்கா அரசைக்கேட்டுள்ளது.

## தொழில் நுட்பக்கல்லூரியை செப்பனிட நடவடிக்கை

(கொழும்பு)

யாழ். தொழில் நுட்பக்கல்லூரி கட்டடம் சிறு அபிவிருத்தி செய்யப்படவுள்ளது. இக் கட்டடத்துக்கு சுமார் இரண்டு லட்சத்து ஏழாயிரத்து அறுநூறுரூபா செலவில் பெயின்ற்பூசப்படவுள்ளது அத்துடன் இக்கல்லூரியில் உள்ள உள்ளக வீதிகளும் செப்பனிடப் படவுள்ளன.

இத் திருத்த வேலைகளுக்கான சகல ஆரம்ப நடவடிக்கைகளும் ஏற்கனவே எடுக்கப் பட்டுள்ளதாக இக் கல்லூரியின் அதிபர் திரு. ஜெயரட்ணம் தெரிவித்தார். (க) (நி)

## வடக்கு-கிழக்கு பிரச்சினை ஒவ்வொரு அரசும் காரணம்

### ரி. பி. சுபசிங்கா தெரிவிப்பு

(கொழும்பு)

வடக்கு — கிழக்குப் பிரச்சினைக்குச் சிறிலங்காவில் ஆட்சியிலிருந்த ஒவ்வொரு அரசும் பொறுப்பாகும். இனப் பிரச்சினை மனித உரிமைகளைச் சீர்குலைத்ததின் விளைவாகவே உருவானதாகும் என்று ரி. பி. சுபசிங்கா கூறினார்.

சிறிலங்கா சுதந்திரக்கட்சி அரசின் முன்னாள் கைத்தொழில் விஞ்ஞான அமைச்சரும், முன்னாள் உலக சமாதான சபை தலைவருமானசுபசிங்கா பன்னலவில் நடைபெற்ற மனித உரிமைகள் பற்றிய கருத்தரங்கில் இதனைத் தெரிவித்தார்.

## பொதுமக்களின் பாதுகாப்பில் அரசுக்கு அக்கறையில்லை

### — ந. ச. ச. கட்சி கடிதம்

(கொழும்பு)

வடபகுதியிலுள்ள அப்பாவிப் பொதுமக்களின் பாதுகாப்பில் அரசாங்கத்திற்கு அக்கறையிருக்குமானால், காலங் கடந்த இந்த நேரத்திலாவது கண்மூடித்தனமாக மேற்கொள்ளப்படும் எறிகணை வீச்சுக்களையும், விமான குண்டு வீச்சுக்களையும் நிறுத்த வேண்டும் இவ்வாறு நவசமசமாசக் கட்சி ஜனாதிபதி டி. பி. விஜேதுங்கவுக்கு எழுதிய கடிதமொன்றில் தெரிவித்துள்ளது

# கடன் செலுத்த தவறியமைக்காக வழக்கு தொடுக்கப்படமாட்டாது

### விவசாய அமைச்சர் தெரிவிப்பு

(கொழும்பு)

விவசாயக் கடனைத் திருப்பிச் செலுத்தாத விவசாயிகள் எவர் மீதும் வழக்கு தொடரப்படமாட்டாது எந்த விவசாயியின் மீதாவது ஏற்கனவே வழக்கு தொடரப்பட்டிருந்தால்அவற்றின்விசாரணைகள் இடை நிறுத்தப்படும்இவ்வாறு விவசாய அபிவிருத்தி ஆராய்ச்சி அமைச்சர் தர்மதாச பண்டா பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் பேசுகையில், வங்கிகளிலிருந்து விவசாயிகள் பெற்ற கடன் தொடர்பாக ஆராய விசேட குழு ஒன்றையும் ஜனாதிபதி நியமிக்கவுள்ளார். இந்தக்குழு விசாரணைகளை நடத்தி விவசாயிகள் பெற்ற கடனை தள்ளுபடி செய்யுமாறு சிபார்சு செய்தால் அதனை அமுல் நடத்த அரசு நடவடிக்கை எடுக்கும் என்றும் உறுதி அளித்தார்.

## பொதுஅறிவுப்போட்டி பரிசளிப்பு விழா

(பண்டத்தரிப்பு)

தியாகி லெப்டினன்ட் கேணல் திலீபன் ஆறாம் ஆண்டு நினைவு நாளை ஒட்டி நடைபெற்ற உரைகளை மாணவர்கள் ஆர்வத்துடன் செவிமடுத்தார்களா என்பதை பரீட்சிக்கும் நோக்குடன் பிரான்பற்று கலைமகள் வித்தியாலய மாணவர்களிடையே பொது அறிவுப் போட்டி ஒன்று அண்மையில் நடாத்தப்பட்டது.

மேற்படி பொது அறிவுப் போட்டியில் சித்தியடைந்த மாணவர்களுக்கான பரிசளிப்பு விழா எதிர்வரும் மூன்றாம் திகதி நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வின் போது வலிகாமம் மகளிர் மாணவர் அமைப்பு பொறுப்பாளர் செல்வி கு. எழிற்கொடி பண்டத்தரிப்பு கோட்ட மகளிர் மாணவர் அமைப்புப் பொறுப்பாளர் செல்வி கு. அருள்நிதி ஆகியோர் கலந்து கொண்டு பரிசில்களை வழங்கி சிறப்பிக்கவுள்ளனர்.

இதேவேளை பண்டத்தரிப்பிலுள்ள பிரான்பற்று கலைமகள் வித்தியாலய மாணவர்கள் அண்மையில் பாடசாலை ஆசிரியர் தின விழாவின் போது தமது கல்லூரியில் கல்விகற்பித்த ஆசிரியர்களை கௌரவிக்கும் முகமாக பெறுமதிவாய்ந்த பரிசில்களை ஒவ்வொரு ஆசிரியர்களுக்கும் வழங்கியமை குறிப்பிடத்தக்கது.

பதவியேற்றபின்

## காலி சவச்சாலைக்கே முதல்விஜயம் தென்மாகாண முதல்வர் தெரிவிப்பு

(காலி)

இன்றைய நிலையில் பிரச்சினைகளுக்கு தீர்வு காண முடியாமல் அரசாங்கம் தத்தளிக்கின்றது என்று தென் மாகாண முதல்வர் அமரசிறி தொடங்கொட தெரிவித்துள்ளார்.

காலியிலுள்ள முதலமைச்சரின் அலுவலகத்திற்கு வந்து சம்பிரதாய பூர்வமாக தமது புதிய பொறுப்பை ஏற்றுக் கொண்ட முதல்வர் தம்மை வாழ்த்த வந்த அதிகாரிகள் மத்தியில் பேசுகையில் மேலும் கூறியதாவது, கதிர்காமம் முதல் புத்தளம் வரையில் எதிர்க்கட்சிகளின் ஆட்சி, வடகிழக்கில்பிரபாகரனின் ஆட்சி, மலையகத்தில் தொண்டமானின் ஆட்சி. இந்த நிலையில் அரசாங்கம் என்ன செய்யப் போகிறது என்று குறிப்பிட்டார்

இவர் முதலமைச்சராகப் பதவிப் பிரமாணம் செய்த அன்றைய தினத்தில் இடம்பெற்ற பொலிசாரின் துப்பாக்கிச்சூட்டிற்கு இலக்காகிப் பலியானவர்களில் ஒருவரான துசார காரியவாசத்தின்இறுதி அஞ்சலி வைபவத்தில் கலந்து கொண்ட முதல்வர் அங்கு உரையாற்றுகையில்,முதலமைச்சராகப் பதவிப் பிரமாணம் செய்வதற்காக ஆளுநர் பாக்கீர் மக்காருடன் ஒரு போராட்டமே நடத்த வேண்டி இருந்தது. இந்தச் சம்பவத்தின் போது கொல்லப்பட்டவர்கள் ஜனநாயகத்தின் பெயரால் தமது உயிர்களை தியாகம் [illegible] செய்துள்ளனர். இதில் ஒருவர் காலி வைத்தியசாலைக்கு சிகிச்சைக்காக வந்தவர், பஸ் நிலையத்தில் நின்றபோது சுடப்பட்டார். நான் பதவியேற்ற பின்னர் காலி வைத்யசாலையின் சவச்சாலைக்கே முதல் விஜயம் மேற்கொண்டேன். இச் சம்பவத்தில் உயிரிழந்த துசார சஞ்சீவ காரியவாசத்தின் பெற்றோருக்கு ரூபா 12,500க்கான காசோலையை முதல்வர் வழங்கி தமது உத்தியோகக் கடமைகளை ஆரம்பித்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

## நாற்றுநடல் பயிற்சி

நவீன முறையில் இயந்திரம் மூலம் நாற்று நடுகையை மேற்கொள்ளமுல்லைமாவட்ட கமநலசேவை நிலையத்துக்கு கொண்டு வரப்பட்டுள்ள இயந்திரத்தை விவசாயிகளுக்கும் மாணவர்களுக்கும் பயிற்சி அளிக்க முல்லை மாவட்ட பயிர்ப் பாதுகாப்பு உத்தியோகத்தர் முன்வந்துள்ளார்.

மேற்படி இயந்திரப் பயிற்சி பெற விரும்பும் விவசாயிகளும் மாணவர்களும் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவன முல்லை மாவட்ட செயலகத்தின் ஊடாக பயிற்சியைப் பெற்று உற்பத்தியை பெருக்குமாறு தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் செய்திக்குறிப்பொன்று தெரிவிக்கின்றது.

# அரசியல் சட்ட நெருக்கடி ஏற்படுத்த தமிழக ஆளுநர் முயற்சி

# மருந்திக்குள்உணவுபொருள் அனுப்பிவைக்கப்பட்டது

(டில்லி)

வந்து படுகொலை செய்வதும், பின்னர் வீதிகளிலோ, ஆறுகளிலோ வீசி எறிவதோ, அன்றி டயர் போட்டு எரிப்பதோ சர்வசாதாரண நிகழ்ச்சியாகவே இருந்தது. இது குறித்து அரசு மீது குற்றம் சாட்டிய போது அரசு அதனை நிராகரித்தது. கொலைக்கும் தமக்கும் தொடர்பில்லை எனவும் சாதித்தது. ஆனால் காலப் போக்கில் அரசாங்கம் உருவாக்கிய சட்டபூர்வமற்ற கொலைக்கும்பலே இக்கொலைகளுக்குக் காரணம் என உறுதி செய்யப்பட்டது.

இந்நிலையில் மீண்டும் தென்னிலங்கையில் ஆள் கடத்தல் சம்பவங்கள் இடம்பெறத் தொடங்கியுள்ளன. ஆனால் கடந்த காலத்தைப் போலவே அரசாங்கம் இதையும் மறுக்கக் கூடும். ஆனால், அது சாத்தியமானதாகவும், நம்பகத்தன்மை கொண்டதாகவும் ஒரு போதும் இருக்கப்போவதில்லை.

அண்மைக்காலத்தில் குறிப்பாக கொழும்பிலும், அதன் புறநகர் பகுதிகளிலும் வகைதொகையின்றியும், காரண காரியம் இன்றியும் தமிழர்கள் கைது செய்யப்பட்டு வருகின்றார்கள். விடுதலைப்புலிகள் என்ற சந்தேகத்தின் பேரிலேயே கைது செய்யப்படுவதாக அரசாங்கம் கூறினாலும், தமிழர்கள் என்ற ரீதியிலேயே கைது செய்யப்படுகின்றார்கள் என்பதை இடம்பெறும் சம்பவங்களே உணர்த்துகின்றன. அதேவேளை, இடம்பெறும் கைதுகள் யாவையும் அரசாங்கத்தின் பணிப்பின் பேரிலேயே நடைபெற்று வருவதாக அரசாங்க தரப்பும் ஒப்புக் கொண்டுள்ளது. அரசாங்கத்தின் பணிப்பின் பேரிலேயே கொழும்பில் படையினர் தேடுதல் வேட்டையில் ஈடுபடுவதாக பாராளுமன்ற எம். பி. நிஹால் விக்கிரமசிங்கா உறுதிப்படுத்துகின்றார்.

இந்நிலையில், ஆட்கடத்தல் நடவடிக்கைக்கும் தனக்கும் சம்பந்தமில்லை என்பதை அரசாங்கம் இலகுவில் மறுத்துவிட முடியாது. மேலும் கொழும்பில் வாழும் தமிழர்கள் அரசாங்கத்தால் அன்றி யாரால் கடத்தப்பட்டாலும் அதற்கு முழுப்பொறுப்பும் அரசாங்கமே ஏற்க வேண்டும். ஏனெனில் கொழும்பின் பாதுகாப்பு அவர்கள் கைகளிலேயே உள்ளது.

அதேவேளை, கொழும்பிலுள்ள தமிழ்க் குழுக்களுடன் இக்கொலைகளை அரசாங்கம் தொடர்புபடுத்தவும் கூடும். ஆயினும் அவர்கள் கொழும்பில் ஆயுதங்கள் வைத்திருக்கவும், அவற்றுடன் நடமாடவும் அரசாங்கமே அனுமதி வழங்கியுள்ளது. இந்நிலையில் அரசாங்கத்தின் கைக்கூலிகளாகச் செயற்படும் இக்குழுக்களும் கொலைகள், கடத்தல்கள் செய்யுமாயின் அதற்கும் அரசாங்கமே முழுப் பொறுப்பும் ஏற்கவேண்டும்.

ஆனால், சிங்களப் பேரிணவாத அரசு இதற்கான பொறுப்பை ஏற்கப் போவதோ அன்றி அது குறித்து கவலைப்படப்போவதோ இல்லை. ஏனெனில் அதன்குறிக்கோள்களில் முக்கியமானது தமிழர் தேசிய இனத்தை எவ்வாறேனும் இலங்கையில் இருந்து அழித்தொழித்தலே ஆகும். இதற்கு வாய்ப்பாக கொழும்பில் வந்து சிக்குபவர்களை கொன்றொழிப்பது என்பது சிங்களப் பேரினவாதத்திற்கு சிங்கத்தின் கூட்டிற்குள் சென்று சிக்கும் இரையைப் போன்றதாகும்,

ஆனால், சிங்களப் பேரினவாதத்திடம் சென்று சிக்கிக் கொள்ளும் தமிழ் இளைஞர்கள், யுவதிகளை எண்ணும் போதுதான் எதைக் கூறுவது என்பது புரியாமல் உள்ளது. தமது இனத்தின் விடுதலைப் போராட்ட காலத்தில் 'பீனிக்ஸ்' பறவைகள் போன்று, தமது சாம்பலில் இருந்து உயிர்த்தெழ வேண்டிய இவர்கள், விட்டில் பூச்சிகள் போல் வீழ்ந்து மடிவது பெரும் அவலமாகும். ஆனால், இவர்களுக்காக கவலைப்படுவதிலோ, அன்றி வேதனைப்படுவதிலோ அர்த்தம் இல்லை. ஏனெனில், இது அவர்களாகத் தேடிக் கொண்டவையாகும்.

---

சீர்குலைத்ததின் விளைவாகவே உருவானதாகும் என்று ரி. பி. சுபசிங்கா கூறினார்.

மனித உரிமைகள் பற்றிய கருத்தரங்கில் இதனைத் தெரிவித்தார்.

## பொதுமக்களின் பாதுகாப்பில் அரசுக்கு அக்கறையில்லை

### - ந. ச. ச. கட்சி கடிதம்

(கொழும்பு)

வடபகுதியிலுள்ள அப்பாவிப் பொதுமக்களின் பாதுகாப்பில் அரசாங்கத்திற்கு அக்கறையிருக்குமானால், காலங்கடந்த இந்த நேரத்திலாவது கண்மூடித்தனமாக மேற்கொள்ளப்படும் எறிகணை வீச்சுக்களையும், விமான குண்டு வீச்சுக்களையும் நிறுத்த வேண்டும் இவ்வாறு நவசமசமாசக் கட்சி ஜனாதிபதி டி. பி. விஜேதுங்கவுக்கு எழுதிய கடிதமொன்றில் தெரிவித்துள்ளது

---

ளிர் மாணவர் அமைப்புப் பொறுப்பாளர் செல்வி கு. அருள்நிதி ஆகியோர் கலந்து கொண்டு பரிசில்களை வழங்கி சிறப்பிக்கவுள்ளனர்.

இதேவேளை பண்டத்தரிப்பிலுள்ள பிரான்பற்று கலைமகள் வித்தியாலய மாணவர்கள் அண்மையில் பாடசாலை ஆசிரியர் தின விழாவின் போது தமது கல்லூரியில் கல்விகற்பித்த ஆசிரியர்களை கௌரவிக்கும் முகமாக பெறுமதிவாய்ந்த பரிசில்களை ஒவ்வொரு ஆசிரியர்களுக்கும் வழங்கியமை குறிப்பிடத்தக்கது.

அன்றைய தினத்தில் இடம்பெற்ற பொலிசாரின் துப்பாக்கிச்சூட்டிற்கு இலக்காகிப் பலியானவர்களில் ஒருவரான துசார காரியவாசத்தின்இறுதி அஞ்சலி வைபவத்தில் கலந்து கொண்ட முதல்வர் அங்கு உரையாற்றுகையில், முதலமைச்சராகப் பதவிப் பிரமாணம் செய்வதற்காக ஆளுநர் பாக்கீர் மக்காருடன் ஒரு போராட்டமே நடத்த வேண்டி இருந்தது. இந்தச் சம்பவத்தின் போது கொல்லப்பட்டவர்கள் ஜனநாயகத்தின் பெயரால் தமது உயிர்களை தியாகம்

திரத்தை விவசாயிகளுக்கும் மாணவர்களுக்கும் பயிற்சி அளிக்க முல்லை மாவட்ட பயிர்ப் பாதுகாப்பு உத்தியோகத்தர் முன்வந்துள்ளார்.

மேற்படி இயந்திரப் பயிற்சி பெற விரும்பும் விவசாயிகளும் மாணவர்களும் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவன முல்லை மாவட்ட செயலகத்தின் ஊடாக பயிற்சியைப் பெற்று உற்பத்தியை பெருக்குமாறு தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் செய்திக்குறிப்பொன்று தெரிவிக்கின்றது.

---

# அரசியல் சட்ட நெருக்கடி ஏற்படுத்த தமிழக ஆளுநர் முயற்சி

## - மாநில அமைச்சர்கள் புகார்

[சென்னை]

தமிழக சட்டசபையை கூட்டுவது தொடர்பாக தமிழக அரசுக்கும் மாநில ஆளுநருக்குமிடையே சர்ச்சைகள் தோன்றியிருந்ததாகக் கூறப்படுகின்றது

பொதுவாக சபாநாயகர் அல்லது முதல்வர் விடுக்கும் வேண்டுகோளின் பேரில் மாநில ஆளுநர் உத்தரவு பிறப்பிக்க சபை கூட்டப்படும். ஆனால் இந்த முறை சட்டசபை கூட்டப்படுவதற்கான வேண்டுகோள் விடப்பட்ட பின்னரும் கூட மாநில ஆளுநர் அதற்கான உத்தரவை பிறப்பிக்கவில்லை. இதனால் முதல்வரும் சபாநாயகரும் பதற்றம் அடைந்தனர். மேலும் இந்திய அரசியலமைப்பின்படி சட்டசபைக் கூட்டத்தொடர்களுக்கு இடையே ஆறு மாதங்களுக்கு மேல் இடைவெளி இருக்கக்கூடாது இதற்கு முந்திய சட்டசபைக் கூட்டம் ஏப்ரல் 30-ல் முடிவடைந்தமையால் அக்டோபர் முடிவதற்கு முன்பாக மீண்டும் கூட்ட வேண்டியிருக்க அதற்கான உத்தரவை பிறப்பிக்காமல் ஆளுநர் இழுத்தடித்தமையால் அரசியல் சட்ட நெருக்கடி ஏற்படக்கூடும் என்ற நிலையில் தமிழக அமைச்சரவை அவசரமாகக் கூடியது நிலைமையை சமாளிக்க மாநில சபாநாயகரும் சட்ட அமைச்சரும் புதுடில்லிக்கு விரைந்து, இந்திய குடியரசுத் தலைவரை சந்தித்தனர். ஆளுநரின் நடத்தை தொடர்பாக குடியரசுத்தலைவர் டாக்டர் சங்கர்தயாள் சர்மா விடம் புகார் கூறப்பட்டது.

பொதுவாக சபாநாயகர், முதல்வர் நேரில்வந்து பார்த்துத்தான் சட்டசபையைக் கூட்டுமாறு வேண்டுகோள் விடுப்பது வழக்கம். அந்த கௌரவத்தை கூட தமிழக அரசு வழங்கவில்லையென்றும் கடந்த 9-ம் திகதி பொலிசாருக்கு பதக்கம் வழங்கும் விழா நெல்லையில் இடம்பெற்றது பற்றி தமிழக ஆளுநருக்கு முன் அறிவிக்கப்படவில்லை என்றும் ஆளுநர் தரப்பில் விளக்கம் கூறப்பட்டுள்ளது.

எனினும் தமிழக சட்டப் பேரவையின் மழைக்காலக் கூட்டத்தொடர் நேற்றுக் காலையில் ஆரம்பமாகி சுமார் ஒரு வார காலம் நீடிக்கும்.

---

# மசூதிக்குள் உணவுபொருள் அனுப்பிவைக்கப்பட்டது

(டில்லி)

காஷ்மீரில் ஹசரத்பல் மசூதியை இந்திய இராணுவம் சுற்றி வளைத்து ஒன்பது நாள்களுக்குப் பிறகு நேற்று முன்தினம் முதல் முதலாக மசூதிக்குள் உணவு அனுப்பப்பட்டது. இந்திய இராணுவம் அனுப்பிய உணவைத் தீவிரவாதிகள் ஏற்க மறுத்ததால் அதனைத் தொடர்ந்து மக்கள் தாம் ஆக்கிய உணவை அனுப்பி வைத்தனர்.

மசூதிக்குள் இருக்கும் தீவிரவாதிகளுடன் தொடர்பு இருப்பதாகவும் இன்னும் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் எதுவும் இல்லை எனவும் தெரிவிக்கப்படுகிறது. அதேவேளை தொலைபேசி தொடர்பு மீண்டும் தீவிரவாதிகளுடன் ஏற்படுத்தப்பட்டுள்ளது

ஆயுதம் தாங்கிய காஷ்மீர் தீவிரவாதிகள் உட்பட நூற்றுக்கும் அதிகமானோர் மசூதிக்குள் உள்ளனர் என்பது தெரிந்ததே.

உள்ளூர் அரசியல் தலைவர்கள் மௌலவி அப்துல் அன்சாலி அவர்களை மத்தியஸ்தராகச் செயற்படும் படி அதிகாரிகள் கோரியுள்ளனர். இராணுவம் மற்றும் அரச அதிகாரிகள் இல்லாமல் மசூதிக்குள் சென்று பேச அனுமதிக்கப்பட்டால் மட்டுமே தான் மத்தியஸ்தத்தில் சம்பந்தப் படத் தயார் என அவர் கூறியிருக்கிறார்.

இதேவேளை இரண்டு சுற்று நேரடிப் பேச்சு வார்த்தைகள் தீவிரவாதிகளுடன் நடைபெற்றது இந்தப் பேச்சுவார்த்தைகளில் மாவட்ட ஆணையாளர் ஹபிபுல்லா கலந்து கொண்டார் நேற்றுமுன்தினம்காலையும். கடந்த சனியன்றுமாலையிலும் பேச்சுவார்த்தைகள் இடம்பெற்றன நேற்றுமுன்தினம் பேச்சுக்கள் இரண்டு மணிநேரம் நடைபெற்றன.

---

# ஜெயலலிதா ஆட்சியைத் தமிழகம் தாங்காது

[சென்னை]

ஜெயலலிதாவின் ஆட்சி நீடித்தால் தமிழகம் தாங்காது என்று திருநாவுக்கரசு கூறியுள்ளார்.

எம். ஜி. ஆர். அண்ணா தி. மு. க. பொதுச் செயலாளர் எஸ். திருநாவுக்கரசு திருச்சியில் நிருபர்கள் மத்தியில் பேசும் போது மேலும் கூறியதாவது,

மாநில ஆளுநருக்கும், மாநில அரசுக்கும் இடையில் கருத்து மோதல்கள் அதிக அளவில் நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது. இதனால் ஐ. ஏ. எஸ். மற்றும் ஐ பி. எஸ். போன்ற உயர் அதிகாரிகள் சம்பந்தப்பட்ட நிர்வாக உத்தரவுகளை ஆளுநருக்கு அனுப்ப முதல்வர் மறுக்கிறார்.

ஆளுநரின் அனுமதி இல்லாமல் முதல்வர் தன்னிச்சையாக முடிவுகள் எடுக்கிறார். உத்தரவுகளைப்போடுகிறார். இப்படி முன்னுக்குப் பின் முரணான செயற்பாடுகள் காரணமாக நிர்வாகத்தில் சிக்கல்கள் ஏற்பட்டுள்ளன.

மத்திய அரசு எந்தத் தயக்கமும் காட்டாமல் 356ஆவது அரசியல் சட்டப்பிரிவை பயன்படுத்தி ஜெயலலிதா ஆட்சியை டிஸ்மிஸ் செய்ய வேண்டும். சட்டசபையை செயல்படாமல் முடக்க வேண்டும் என்றும் அவர் தெரிவித்தார்.

---

# எந்த நிலைமையையும் சமாளிக்க தயாராக இருக்க வேண்டும்

## முதல்வர் ஜெயலலிதா

(சென்னை)

அடுத்து எந்த நடவடிக்கைகள் வந்தாலும் அதனை ஏற்கத் தயாராக இருப்போம் என்று தமிழக முதல்வர் ஜெயலலிதா கூறியுள்ளார்.

அ.இ. அ. தி. மு. க தலைமைக் கழகத்தில் அக்கட்சியின் எம் பிக்கள் மற்றும் எம்.எல் ஏக்கள் கூட்டத்தைக் கூட்டிய முதல்வர் ஜெயலலிதா அங்கு உரை நிகழ்த்துகையில், மாநில ஆளுநர் மாநில அரசுடன் மோதல் போக்கை கடைப்பிடித்து வருவதால் அடுத்து வரும் எந்த நடவடிக்கைகளையும் சந்திக்க தயாராக இருக்க வேண்டும். எந்த நிலைமையையும் சமாளிக்க வேண்டும்

பழநி பாராளுமன்றத் தொகுதிக்கான தேர்தலில் சில சட்டமன்ற தொகுதிகளில் அ.தி.மு.க ஓட்டுகுறைந்துள்ளது. இது சரியல்ல எம்.எல். ஏக்கள் மக்களிடையே நெருங்கிப்பழகவில்லை என்பதையே இது காட்டுகிறது. தி. மு. கவில் ஏற்பட்டுள்ள கோஷ்டி மோதல் அக்கட்சியின் உள் விவகாரமே. ஆனாலும் வை. கோபாலசாமி ஆதரவாளர்கள் எவராவது நமது பக்கம் வருவார்களா என்பதை அவதானிக்க வேண்டும் எனவும் குறிப்பிட்டார்.

---

# கருணாநிதிக்கு எதிராக தமிழக நகரங்களில் கூட்டம்

## - வை. கோ. அணி ஏற்பாடு

(சென்னை)

தி.மு.க தலைவர் கருணாநிதிக்கு எதிர்ப்பு தெரிவிக்கும் பிரசாரக் கூட்டங்களை தமிழ்நாடு எங்கும் நடத்த வை. கோபாலசாமி அணியினர் திட்டமிட்டுள்ளனர். இந்த வகையில் முதலாவது கூட்டம் இன்று தமிழ்நாடு குடவாசல் நகரிலும், நாளை திருப்பரங்குன்றத்திலும் நடைபெறவுள்ளது. அதைத் தொடர்ந்து விழுப்புரம் மற்றும் சென்னை போன்ற பெரும் நகரங்களிலும் பிரமாண்டமான பொதுக் கூட்டங்களை நடத்த ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன.

இந்தக் கூட்டங்கள் நடத்தப்படுவதால், வை. கோபாலசாமி கட்சியை விட்டு நீக்கப்பட்டால் அதை சந்திக்க தயாராக இருப்பதாகவும், கட்சியை விட்டு நீக்கப்பட்டால் அவர் நாஞ்சில் மனோகரனுடன் இணைந்து தனியகாக் கட்சிநடத்த முற்படலாம் என்றும் கூறப்படுகிறது.

## முதலாவது பிறந்த நாள் வாழ்த்து (26-10-93)



### இராஜ்குமார் சாயிபிருந்தன்

தனது முதலாவது பிறந்த நாளை 26-10-93 இன்று விமரிசையாகத்தனது இல்லத்தில் கொண்டாடுகின்றார். இவரை அப்பா, அம்மா மற்றும் உறவினர்கள் நண்பர்கள் ஆகியோர் பல்கலையும் பெற்றுப்பல்லாண்டு வாழ வாழ்த்துகின்றனர்.

14, அரசவீதி (சங்கிலியன் வீதி ஊடாக), நல்லூர், யாழ்ப்பாணம். (6382)

---


## வீடியோ ஜீவிதாவின் நேற்றைய புதிய வெளியீடு

ஐ லவ் இந்தியா — சரத்குமார் ப்பிரியா
கறுப்பு வெள்ளை — ரகுமான், சுகன்யா
தூள் பறக்குது — ரகுவரன், ரம்பையா ருஸ்ணன் செந்தில்
ஆடி அமாவாசை — சந்திரராவ், ஜெயரேகா
பொறந்தாலும் ஆம்பிளையாய் பொறக்கக்கூடாது — பாண்டியராஜன் ஐஸ்வரியா

**ஒரிஜினல் பிரதிகள்**

**வீடியோ ஜீவிதா**

ஒட்டுமடம் சந்தி, (6386) யாழ்ப்பாணம்.


---

தொழிநுட்பக்கல்லூரி-யாழ்ப்பாணம்

## 1994-ம் கல்வியாண்டிற்கான அனுமதி

1993-10-01-ம் திகதிய அரச வர்த்தமானியில் பிர சுரிக்கப்பட்ட கற்கைநெறிகளுக்கு உரியவர்களிடமிருந்து விண்ணப்...

---

# மாகாணசபைகளுக்கு உரிய அதிகாரம் வழங்குக

## எதிர்க்கட்சி முதலமைச்சர்கள் கோரிக்கை

அரசியல் அமைப்பின் கீழ் மாகாணசபைக்கு வழங்கப்பட்ட அதிகாரங்கள் வழங்கப்படவேண்டும் என எதிர்க்கட்சி மாகாண சபையைச் சேர்ந்த மூன்று முதலமைச்சர்கள் கூட்டாக வேண்டுகோள் விடுக்கவுள்ளனர்.

இந்த அதிகாரங்களை பெறும் பொருட்டு தாம் ஒன்றிணைந்து செயற்படப்போவதாக தென்மாகாணம் மேல் மாகாணம், வடமேல மாகாணத்தைச் சேர்ந்த முதலமைச்சர்கள் தீர்மானம் செய்துள்ளனர். அதாவது நிர்வாக அதிகாரம், நிதி ஒதுக்கீட்டு அதிகாரம் மற்றும் பொலிஸ் அதிகாரங்களை வழங்குமாறு அரசாங்கத்திடம் வேண்டுகோள் விடுக்கப்போவதாக மேல் மாகாண முதலமைச்சர் ஜீ. எம். பிரேமச்சந்திரா தெரிவித்துள்ளார்.

இவ் வேண்டுகோளுக்கு அரசாங்கத்தினால் சரியான பதில் தராவிட்டால் அரசாங்கத்திற்கு எதிராக சட்டரீதியான நடவடிக்கை எடுக்கப்போவதாக முதலமைச்சர்கள் மூவரும் தீர்மானித்துள்ளதாக பிரேமச்சந்திரா மேலும் தெரிவித்துள்ளார்.

இது விடயமாக எதிர்க்கட்சித் தலைவி திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா மற்றும் ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணித் தலைவர் காமினி திசாநாயக்காவுடனும் இம் மூன்று முதலமைச்சர்களும் சந்தித்துப் பேசியுள்ளதாகவும் தெரிவருகின்றது.

## சமுகமளிக்க கோரிக்கை

பலாலி ஆசிரியர் கலாசாலையிலிருந்து 1992ஆம்ஆண்டு டிசெம்பர் மாத இறுதி பரீட்சையில் சாதாரண சித்திபெற்றவர்கள் மீண்டும் விண்ணப்பிப்பதற்காக இன்று பலாலி ஆசிரியர் கலாசாலைக்கு சமுகமளிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர். (பா)

## கலை விழா

இளையதம்பி இந்து வித்தியாலயத்தின் கலை விழா இன்று காலை பாடசாலை மண்டபத்தில் அதிபர் செல்லையா தலைமையில் நடைபெறவுள்ளது. முதன்மை விருந்தினராக யாழ். மாநகர சபை ஆணையாளர் வே.பொ. பாலசிங்கமும். கௌரவ விருந்தினராக தமிழீழ கல்விக் கழகப் பொறுப்பாளர் வெ. இளங்குமரனும் சிறப்பு விருந்தினராக நல்லூர் கோட்ட உதவிக் கல்விப பணிப்பாளர் பிதானையாவும்கலந்துகொள்ளவுள்ளனர்.

## ஒன்றுகூடல்

யாழ் பாதிக்கப்பட்ட மாணவர் ஒன்றியத்தினரால் பாதிக்கப்பட்ட மாணவருக்கான ஒன்றுகூடல் ஒன்று இன்று நெல்லியடி யங்ஹேறாயல் கல்வி நிலையத்தில் காலை 8 00 மணிக்கு நடைபெறவுள்ளது. 1992 ஆம் ஆண்டு விசேட பரீட்சையில் 180க்கு மேல் பெற்றவர்களை கலந்து கொள்ளுமாறு தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை சிறிலங்கா...

## 'அதிர்ச்சி நோய் எமக்கல்ல' நூல் நாளை வெளியீடு

நாகபத்மநாதன் அவர்கள் எழுதிய உருவகங்களின் தொகுப்பான 'அதிர்ச்சிநோய் எமக்கல்ல' என்ற நூல் நாளை வெளியிடப்படுகின்றது.

இதன் வெளியீட்டு விழா, நாளை புதன்கிழமை மாலை 4.00 மணிக்கு யாழ்ப்பாணம நாவலர் கலாசார மண்டபத்தில் நடைபெறுகின்றது. (ஈழநாதம் செயலகத்தின் அருகில்)

விடுதலைப் புலிகள் கலை பண்பாட்டுக் கழகப் பொறுப்பாளர் திரு புதுவை இரத்தினதுரை அவர்களின் தலைமையில் நடைபெறும் இவ் விழாவில் திரு. அ யேசுராசா அவர்கள் வெளியீட்டுரையை ஆற்றுவார். தமிழீழக் கல்விக் கழகப் பொறுப்பாளர் திரு வெ இளங்குமரன் அவர்கள் நூலை வெளியீட்டு வைக்க, 'சிரித்திரன்' ஆசிரியர் திரு சிவஞானசுந்தரம் அவர்கள் முதற்பிரதியைப் பெறுவார். நூலின் மதிப்பீட்டுரையை பேராசிரியர் அ சண்முகதாஸ். கவிஞர் சோ பத்மநாதன், பண்டிதர் வீ பரந்தாமன் ஆகியோர் நிகழ்த்துவார்கள்.

இந் நூலை தமிழ்த்தாய் வெளியீட்டகத்தினர் வெளியிடுகின்றனர்

### வரவு செலவு

பாராளுமன்றத்தில் ஒருகோடி மூன்று இலட்சத்து 98 ஆயிரம் ரூபாவுக்கான குறை நிரப்பு பிரேரணை யொன்றைச் சமர்ப்பித்தார்.

### பாரிய

வருடத்தின் முதல் 9மாதங்களை மையமாக வைத்து திரட்டப்பட்ட புள்ளி விபரங்கள் கீழே தரபடுகின்றன. குற்றச் செயல்களில் பாரிய குற்றங்கள் எனக் கருதப்படும் குற்றங்கள் பற்றிய முறைப்பாடு யாழ். குடாநாட்டில் 1992 இல் 4157 ஆகவும் 1993 இல் 1220 ஆகவும் பதிவு செய்யப்பட்டுள்ளன.

யாழ்குடாநாட்டில் பெண்களுக்கெதிரான குற்றச் செயல் 1992 இல் 1084 ஆகவும்...

### 2 இலட்சம்

பாக இறுதி முடிவுகள் மிக விரைவில் எடுக்கப்பட உள்ளதாகவும் சுவிஸ்லாந்தை பின்பற்றி கட்டம் கட்டமாக திருப்பி அனுப்புவது குறித்து ஆராயப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது

கனடாவில் 40,000 பேர் ஜேர்மனில் 40,000 பேர் நோர்வேயில்15,000பேர், சுவீடனில் 15,000பேர், பிரிட்டனில் 25,000 பேர், நெதர்லாந்தில் 10,000 பேர், ஜப்பானில் 10,000 பேர் இவ்வாறு புகலிடம் பெற விண்ணப்பித்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது

### கிளாலி

யினருக்கும் பொலிசாருக்கும் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது இதற்காகவே நாம் வவுனியாவில் எமது பாதுகாப்பு நடவடிக்கையை பலப்படுத்தி வருகிறோம்.

வவுனியா தாண்டிக்குளம் செல்லும் உணவு லொறிகள் வவுனியாவில் வைத்து இராணுவத்தினரால் நீண்ட நாட்கள் தடுத்துவைத்துசோதனையிடப்படும் விவகாரம் குறித்து நிருபர்கள் இராணுவஅதிகாரியிடம் கேட்டனர் அப்போது அவர் கூறியதாவது; இந்த...

---

## அரசன்நகர் வேலைத் திட்டத்தில் பல்கலை. மாணவர்கள்

யாழ்தேவி நடவடிக்கையால் இடம்பெயர்ந்த அரசன் நகர் மக்களின் வாழ்விட வசதிக்கான வேலைத் திட்டத்தில் பல்கலைக் கழக மாணவர்கள் அணி ஒன்று போராளிகளுடனும், மக்களுடனும் இணைந்து வேலைத் திட்டத்தை மேற்கொண்டு வருகின்றனர்.

பல்கலைக் கழக மாணவர்களின் முதலாவது அணி கடந்த 5 தினங்களாக மேற்படி பணியை முடித்துக் கொண்டு தற்போது திரும்பியுள்ளனர். தொடர்ந்தும் இப் பணியின் பூர்த்திக்காக கட்டம் கட்டமாக பல்கலைக் கழக மாணவர்கள் இப் பணிக்காக செல்லவிருக்கின்றனர்.

## உள்வந்த வெளிச்சென்ற வாகன இலக்கங்கள் 25.10.93

எமது பதிவில் உள்ள கடைசி இலக்கம்: 11401

வடபகுதிக்கு உள்ளே வந்த வாகன இலக்கங்கள்:

28-0912, 42 8316, 42-9345, 24 9938, 43-1019
28-9449, 27-7711, 43 1062, 26 7187, 27 5186
42-3114, 22 5622, 42 1722, 24 9609, 41 9663
42 1623, 22 6452, 22 1355, 24-9744 41 6933
24-9390, 43 2524, 24 8391, 26 4281, 27 9416
27 5823 26 5760.

வடபகுதிக்கு வெளியே சென்ற வாகன இலக்கங்கள்:

24-5967, 41 9177, 2[illegible]-7297, 2[illegible]-2108, 26-6075
24 5454, 24 6532, 21 5121, 41 9895, 28-1706
41-1996, 28-1020, 27-5187, 42 7975, 41-2659
26-5517 24 5886, 2[illegible]-6029, 27-7740, 41-9480
28-1636, 42-0962, 23 1461, 26-2786, 41-7041

---


## அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பு முடிவுகள்

நாமகள் சனசமூகநிலையத்தின் வளர்ச்சிக்காக 24-10-93 அன்று நடாத்தப்பட்ட அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பில் பரிசில்களைப்பெற்ற சீட்டின் இலக்கங்கள் பின்வருமாறு:

1-ம் பரிசு — இல. 2475
2-ம் பரிசு — இல. 968
3-ம் பரிசு — இல. 2258

ஆறுதல் பரிசில்கள்

(1) இல. 282 (2) இல. 408 (3) இல. 594
(4) இல 1039 (5) இல. 1164 (6) இல. 2423
(7) இல 2488

மேற்படி சீட்டின் இலக்கங்களையுடைய அதிர்ஷ்டசாலிகள் 14-11-1993இற்கு முன்னதாக தமக்குரிய பரிசில்களை நிலையத்தினரிடம் பெற்றுக்கொள்ளவும்

– நன்றி –

நிர்வாகிகள்
நாமகள் சனசமூக நிலையம்
சுதுமலை வடக்கு, மானிப்பாய்.

(6389)


## மரண அறிவித்தல்கள்

பரநாதப்பிள்ளை...

கறுப்பு வெள்ளை ரகுமான், சுகன்யா
தூள் பறக்குது ரகுவரன், ரம்பையா ருஸ்ணன் செந்தில்
ஆடி-அமாவாசை காந்ராரவ், ஜெயரோகா
பெறந்தாலும் ஆம்பிளையாய்
பொறக்கக்கூடாது பாண்டியராஜன் ஐஸ்வரியா

**ஒறிஜினல் பிரதிகள்**

**வீடியோ ஜீவிதா**

ஒட்டுமடம் சந்தி, (6386) யாழ்ப்பாணம்.

தொழினுட்பக்கல்லூரி-யாழ்ப்பாணம்

## 1994-ம் கல்வியாண்டிற்கான அனுமதி

1993-10-01-ம் திகதிய அரச வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட தற்கிணங்க உரியவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இதற்கமைய விண்ணப்பங்களை 1993 நவெம்பர் 15-ம் திகதிக்கு முன்னர் பதிவுத்தபாலில் அதிபர், தொழினுட்பக் கல்லூரி, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம். என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் மட்டும் அனுப்பி வைக்குமாறும், எதுவித காரணங் கொண்டும் நேரடியாகப் பெற்றுக் கொள்ளப்படமாட்டாது எனவும் அறியத்தருகிறேன்.

தொழினுட்பக் கல்லூரி,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
1995-10-25

க. ஜெயரத்தினம்
அதிபர்

(சி/7781)

## 45-ம் நாள் நினைவலைகள்



**லெப். லிங்கம்**
[சிவஞானம் ஜெய்சங்கர்]
சாம்பல்த்தீவு திருகோணமலை

தமிழ்த்தாயின் மடியில்: **19-11-1969**
தமிழீழ அன்னை மடியில்: **12-09-1993**

தாயினும் நிகரான-தமிழீழ
தாயகத்தை மீட்டிடவே
தணியாத தாகத்துடன்
தலைவன் வழி நடந்தீரே
சாவினைச் சரித்திரமாக்கி
சாதனை பல புரிந்தீரே.
விடியலுக்கு விளை நிலமாய்
தமிழுக்கே வித்தாகி
தமிழீழச் சொத்தானீர்.
நாட்கள் பல மறைந்தாலும் லிங்கமே
உங்கள் நினைவுடனே வாழ்கின்றோம்.

B. S. லேன்,
மானிப்பாய் வீதி,
யாழ்ப்பாணம். (6387)

உன் துயரில் வாடும்
பெற்றோர், சகோதரர்கள்,
உறவினர்கள், நண்பர்கள்

பாலசிங்கமும், கௌரவ விருந்தினராக தமிழீழ கல்விக் கழகப் பொறுப்பாளர் வெ. இளங்குமரனும் சிறப்பு விருந்தினராக நல்லூர் கோட்ட உதவிக் கல்விப் பணிப்பாளர் பிதானையாவும்கலந்துகொள்ளவுள்ளனர்.

### ஒன்றுகூடல்

யாழ் பாதிக்கப்பட்ட மாணவர் ஒன்றியத்தினரால் பாதிக்கப்பட்ட மாணவருக்கான ஒன்றுகூடல் ஒன்று இன்று நெல்லியடி யங்றோயல் கல்வி நிலையத்தில் காலை 8 00 மணிக்கு நடைபெறவுள்ளது. 1992 ஆம் ஆண்டு விசேட பரீட்சையில் 180க்கு மேல் பெற்றவர்களை கலந்து கொள்ளுமாறு தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை சிறிலங்கா ஜனாதிபதிக்கு அனுப்பவுள்ள மகஜரில் கையொப்பமிடாத மாணவர்கள் இன்று மாலை 3·30 மணிக்கு யாழ இந்துக் கல்லூரியில் கூடுமாறு கேட்கப்பட்டுட்ளனர். (யோ)

### சக்திவாய்ந்த

தற்போது அமெரிக்கா, பிரிட்டன், ரஷ்யா போன்ற நாடுகள் பயன்படுத்தும் அதிக வலுவுள்ளதும் கனரகமானவையுமான யுத்த டாங்கிகளை கொள்வனவுசெய்வது குறித்து சிறிலங்கா பாதுகாப்புஅமைச்சு வட்டாரத்தில்ஆராயபடுகிறது

இதனிடையே சிறிலங்கா அரசால் வாங்கப்பட்ட ரி 55 ரக டாங்கிகளில் பல பழுதடைந்துள்ளதாக சிறிலங்கா இராணுவ வட்டாரங்களில் இருந்து தெரிவிக்கப்படுகிறது. இவற்றைத் திருத்துவதற்கென செக்கோ செலவேக்கியாவில் இருந்து நிபுணர்களை அழைத்துவர வேண்டுமெனவும் தெரிவிக்கப்படுகிறது.

### காவல்துறையின்

சங்கங்கள், கிராமசேவையாளர் மற்றும் பொதுமக்களை அழைத்து காவல்துறையினரின் செயற்பாடுகளில் மக்களின் அபிப்பிராயங்களைக் கேட்டு வருகின்றனர். தமிழீழ காவல் துறை பொறுப்பாளர் திரு. நடேசன் தலைமையில் செல்லும் குழுவில் அந்தந்தப் பகுதி காவல் பணிமனையினரும் அங்கம் வகிக்கின்றனர்.

இக்குழுவினர் பருத்தித்துறை நாகர்கோவில், கோப்பாய், யாழ்நகர், சுன்னாகம் உட்பட பல கிராமங்களுக்கும் சென்று இவ்வாறு மக்கள் அபிப்பிராயத்தை பெற்றுள்ளனர்.

இவ்வாறு கிராமங்கள் தோறும் செல்கையில் மக்கள் தாமாகமுன்வந்து குறைநிறைகளைச் சுட்டிக்காட்டி வருவதாக தமிழீழ காவல் துறைப் பொறுப்பாளர் திரு. பா. நடேசன் நமது நிருபருக்குத் தெரிவித்தார். [ச]

### வரவு செலவு

பாராளுமன்றத்தில் ஒருகோடி மூன்று இலட்சத்து 98 ஆயிரம் ரூபாவுக்கான குறை நிரப்பு பிரேரணை யொன்றைச் சமர்ப்பித்தார்.

### பாரிய

வருடத்தின் முதல் 9மாதங்களை மையமாக வைத்து திரட்டப்பட்ட புள்ளி விபரங்கள் கீழே தர படுகின்றன. குற்றச் செயல்களில் பாரிய குற்றங்கள் எனக் கருதப்படும் குற்றங்கள் பற்றிய முறைப்பாடு யாழ். குடாநாட்டில் 1992 இல் 4157 ஆகவும் 1993 இல் 1220 ஆகவும் பதிவு செய்யப்பட்டுள்ளன.

யாழ்குடாநாட்டில் பெண்களுக்கெதிரான குற்றச் செயல் 1992 இல் 1084 ஆகவும் 1993 இல் 120 ஆகவும் பதிவு செய்யப்பட்டுள்ளன.

இப்பாரிய குற்றச் செயல்களில் வீடுடைத்துக்களவு 1992 இல் 332 இலிருந்து 1993 இல் 208 ஆகவும் துவிச்சக்கர வண்டிக்களவு 1050 இலிருந்து 632 ஆகவும் 25 ஆயிரம் ரூபாவிற்கு மேற்பட்ட ஏமாற்றுதல் நம்பிக்கைத்துரோகம் போன்ற குற்றச் செயல்கள் 845 இலிருந்து 15 ஆகவும் கற்பழித்தல் 23 இலிருந்து 3 ஆகவும் யாழ்குடாநாட்டில் வீழ்ச்சியடைந்துள்ளன.

வன்னி மாவட்டத்தில் 1993இல் வீடுடைத்துகளவு 96 ஆகவும் துவிச்சக்கரவண்டிகளவு 179 ஆகவும் 25 ஆயிரம் ரூபாவிற்கு மேற்பட்ட ஏமாற்றுதல் மற்றும் நம்பிக்கைத்துரோகம் என்பன 05 ஆகவும் பதிவு செய்யப்பட்டுள்ளன இதேபோல் யாழ்குடாநாட்டில் பெண்களுக்கு எதிரான குற்றச் செயல்களான திருமணம் செய்த பெண்ணைவிட்டு வேறு பெண்ணை மணத்தல் 1992 இல் 176 இலிருந்து 1993இல் 08ஆகவும் சேட்டை விடுதல் 94இலிருந்து 13ஆகவும் திருமணம் செய்த பின் பெண்ணை விட்டுப் பிரிதல் 47இலிருந்து 01ஆகவும் பெண்ணை அடித்துஅவமானப்படுத்துதல் 264 இலிருந்து 53ஆகவும் அவமானப்படுத்துதல் 194இலிருந்து 01ஆகவும் காதலித்த பெண்ணை திருமணம் செய்ய மறுத்தல் 98இலிருந்து 08ஆகவும் வீழ்ச்சியடைந்துள்ளன. வன்னி மாவட்டத்தில் 1993 இல் திருமணம் செய்த பெண்ணைவிட்டு வேறு பெண்ணை மணத்தல் 18ம் அடித்து அவமானப்படுத்தல் 50ம் காதலித்த பெண்ணை திருமணம் செய்ய மறுத்தல் 04ஆம் பதிவாகியுள்ளன.

மேற்படி தகவல்கள் தமிழீழக் காவல்துறை புள்ளிவிபரப் பிரிவிலிருந்து பெறப்பட்டவற்றில் சிலவாகும். [ச]

நோர்வேயில்15,000பேர், சுவீடனில் 15,000பேர், பிரிட்டனில் 25,000 பேர், நெதர்லாந்தில் 10,000 பேர், ஜப்பானில் 10,000 பேர் இவ்வாறு புகலிடம் பெற விண்ணப்பித்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது

### கிளாலி

யினருக்கும் பொலிசாருக்கும் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது இதற்காகவே நாம் வவுனியாவில் எமது பாதுகாப்பு நடவடிக்கையை பலப்படுத்தி வருகிறோம்.

வவுனியா தாண்டிக்குளம் செல்லும் உணவு லொறிகள் வவுனியாவில் வைத்து இராணுவத்தினரால் நீண்ட நாட்கள் தடுத்துவைத்துசோதனையிடப்படும் விவகாரம் குறித்து நிருபர்கள் இராணுவஅதிகாரியிடம் கேட்டனர் அப்போது அவர் கூறியதாவது; இந்த விவகாரம் அண்மையில் எதிர்க்கட்சியினரால் பாராளுமன்றத்திலும் எடுத்துக் கூறப்பட்டுள்ளது இந்த சோதனை விவகாரம் தொடர்பாக அமைச்சர் காமினி அத்துக்கோறளை தலைமையில் உயர்மட்டத் தூதுக்குழு ஒன்று வவுனியா வந்து விசாரணை நடத்தியுள்ளது

வடபகுதிக்குச் செல்லும் உணவுலொறிகளை சோதனை நடத்தி அனுமதிப்பதற்கென சரியான ஒரு அமைப்பு ஒன்று ஏற்படுத்தி அதன் மூலம் இந்த சோதனைகளை நடத்தலாம் என குழு அபிப்பிராயம் தெரிவித்துள்ளது. இது பற்றி இக்குழு அரசாங்கத்திற்கு அறிக்கை ஒன்றைச் சமர்ப்பிக்குமென அந்த அறிக்கை வந்த பின்னரே நிலைமை தெளிவாகும் என்று அந்தஇராணுவ அதிகாரி மேலும் தெரிவித்தார்.

### வெட்டு புள்ளி

வர் சமுதாயத்தை சீரழிக்கும் நோக்குடனும் எதிர்கால சந்ததியை பின்னடையச் செய்யும் நோக்குடனும் இவ் வெட்டுப்புள்ளி முறை ஏற்படுத்தப்பட்டுள்ளதாகவும் அதனைக் கண்டிக்கு முகமாகவே இவ் வெட்டுப் புள்ளி நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதாகவும் மாணவர்கள் தெரிவித்தனர்.

### வெற்றி

லாதன் வடமராட்சி கோட்ட கலைபண்பாட்டு கழகப்பொறுப்பாளர் பாஸ்கரன் யாழ் பல் கலைக்கழகத்தைச் சேர்ந்த செல்வி சந்திரா, யாழ்மாவட்ட அரசியல் துறைப்பொறுப்பாளர் இளம்பரிதி, விடுதலைப்புலிகள் கலைபண்பாட்டுக்கழகப் பொறுப்பாளர் புதுவை இரத்தினதுரை ஆகியோர் நிகழ்த்தினர் பரிசில்களை அரசியல் துறைப்பொறுப்பாளர் தமிழ்ச்செல்வன் வழங்கினார் தொடர்ந்து கலை நிகழ்ச்சிகளும் இடம்பெற்றன (சி)

ஆறுதல் பரிசில்கள்

(1) இல. 282 (2) இல. 408 (3) இல. 594
(4) இல 1039 (5) இல. 1164 (6) இல. 2423
(7) இல 2488

மேற்படி சீட்டின் இலக்கங்களையுடைய அதிர்ஷ்டசாலிகள் 14 11 1993இற்கு முன்னதாக தமக்குரிய பரிசில்களை நிலையத்தினரிடம் பெற்றுக்கொள்ளவும்

**– நன்றி –**

**நிர்வாகிகள்**
நாமகள் சனசமூக நிலையம்
சுதுமலை வடக்கு, மானிப்பாய்.

(6389)

# மரண அறிவித்தல்கள்

## பறுநாந்துபிள்ளை மரியநாயகம்

பறுநாந்துபிள்ளை மரியநாயகம் (அர்ச்சுனா புகைப்பட பிரிவு-கணக்காளர்) 25-10-93 (நேற்று) மரணமானார். செபஸ்ரியாம்பிள்ளை பறுநாந்துப்பிள்ளை, ப மரியம்மா என்பவர்களது புதல்வரும், ம மரியம்மாவின் அன்புக்கணவரும், R C மரியநாயகம் (யாழ் தொழில் நுட்பக்கல்லூரி N C. A.I.I-ம் வருடம்), ம. றொக்சிடர் ஜினி (யாழ். திருக்குடும்பக் கன்னியர்மடம்), ம.றெக்சன் மொறிஸ் (சென். சாள்ஸ் மகாவித்தியாலயம்) என்பவர்களது அருமை தந்தையும், ப. சிங்கராயர் (பொன்னுத்துரை), ப ஜோன்பிள்ளை (ராஜா),ப. அழகு (ஜேர்மனி) இ. வனிதா ஆகியோரது சகோதரனும் ஆவார். இவரது இறுதி கிரியைகள் (26 10 93) இன்று மாலை 4-00 மணிக்கு இல. 21/3 மவுண்கார் மேல் வீதி, குருநகரில் உள்ள அன்னாரது இல்லத்தில் இருந்து நல்லடக்கத்திற்காக, புனித கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும் இவ்வறிவித்தலை உற்றார், உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்

(சி/7783)

## திரு. செல்லையா அப்புத்துரை

[இளைப்பாறிய உப அதிபர்]

ஏழாலையைப் பிறப்பிடமாகக்கொண்டவரும், உடுவில் மேற்கை வசிப்பிடமாகக் கொண்டவருமான செல்லையா அப்புத்துரை காலமானார். அன்னார் குகானந்தநாயகியின் [ஆரம்பப்பிரிவுப் பகுதி தலைவர் இராமநாதன் கல்லூரி] அன்புக் கணவரும், அரவிந்தன் [1991 உயர்தரமாணவன் யாழ் இந்துக்கல்லூரி], அஜந்தா [1993 உயர் தரமாணவி யாழ் இந்து மகளிர் கல்லூரி] ஆகியோரின் அன்புத் தந்தையும், சிவஞானம், காலஞ்சென்ற சின்னத்துரை, காலஞ்சென்ற செல்லம்மா, நாகம்மா அன்னம்மா, மாகாலிங்கம், வசந்தா, சண்முகரத்தினம் ஆகியோரின் அன்புச் சகோதரருமாவார். இறுதிக் கிரியைகள் இன்று[26 10-1993]பிற்பகல் 3 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக பூவோடை மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர் நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்

தகவல்;
சி.சிவராஜன்

'பிருந்தாவன்'
உடுவில் மேற்கு,
சுன்னாகம். (6390)

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி 31 ஆம் இலக்கத்திலுள்ள ஈழநாதம் பணிமனையில் 1993 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 26ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.